# ஆண்டறிக்கை 2021

*உயர்வுக்கான மையம்*

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,**
**எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,**
**அத்துருகிரிய.**

**தோலைபேசி** : 011-2770232
**தொலைநகல்** : 011-2798775
**மின்னஞ்சல்** : nipm1979@gmail.com.
**வலைத்தளம்** : www.nipm.gov.lk

DO/ACC/02

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நோக்கு மற்றும் பணி நோக்கு | 02 |
| 2. | தவிசாளரின் செய்தி | 03 |
| 3. | பணிப்பாளர் மதிப்பாய்வு | 04-08 |
| 4. | நிறுவனத்தின் உருவாக்கம் மற்றும் நோக்கம் | 09-11 |
| 5. | ஆளுநர் சபையின் தொகுப்பு | 12 |
| 6. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை | 13 |
| 7. | நிறுவனத்தின் பணியாளர்கள் | 14-17 |
| 8. | நிர்வாகத்தின் பிரிவின் மீளாய்வு | 18 |
| 9. | கட்டமைப்பு அட்டவணை | 19 |
| 10. | நிறுவனத்தின் முதன்மை பயிற்சி செயற்பாடுகள் | 20-22 |
| 11. | பயிற்சிநெறிகளின் முன்னேற்ற மீளாய்வு | 23-31 |
| 12. | ஏனைய நிறுவனங்களுக்காக நடத்தப்படும் பரீட்சை | 31-33 |
| 13. | பெருந்தோட்ட முகாமைத்தவ விஞ்ஞானமாணி (BSc.) பட்டம். | 34 |
| 14. | நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவம் | 35 |
| 15. | கிடைக்கும் வசதிகள் | 35-37 |
| 16. | நிதி மீளாய்வு | 38 41 |
| 17. | நிறுவனம் முகங்கொடுத்த சவால்கள் | 42 |
| 18. | செயற்திறனை முன்னேற்றுவதற்கான இடைத்தவணை தந்திரோபாயங்கள். | 42-43 |
| 19. | முடிவுரை | 44 |
| 20. | நிதி அறிக்கைகள | 45-92 |
| 21. | கணக்காய்வாளர் நாயக அறிக்கை | 93-100 |

## நோக்கு

பெருந்தோட்ட முகாமைத்துவம் குறித்த பயிற்சி ஆலோசனை மற்றும் ஆரச்சி செய்வதில் அதி சிறந்த நிலையமாக இருத்தல்

## குறிக்கோள்

பெருந்தோட்ட தொழிலிலுள்ள அனைத்து மனித சொத்துகளின் தொழில்சார் திறனை தரமான பயிற்சி மூலம் முழுமையை நோக்கி உயர்த்துதல்

# தவிசாளரின் செய்தி



2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தற்போதைய தவிசாளராக இந்த செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறேன்.

எந்தவொரு நிறுவனமும் அதன் நோக்கங்களை அடைவதற்காக பல்வேறு வகையான வளங்களை ஒழுங்கு செய்கின்றது, இந்த பல்வேறுபட்ட வளங்களில் மனித வளம் மட்டுமே உயிர் வாழ்கின்ற வளமாகும். மனித வளமானது நிறுவனத்தினுடைய நோக்கங்களை அடைவதற்கு மிகவும் முக்கியமானது. ஏன்னெனில் ஏனைய அனைத்து உயிரற்ற வளங்களும் மக்கள் குழுவால் வழி நடத்தப்படுகின்றது. பரந்தளவில் அறிவை பகிர்தல், திறன் மேம்படுத்தல் மற்றும் மக்களிடையில் நேர்மையான மனப்பாங்கை வளர்ப்பதன் மூலம் மனிதவள விருத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டை திரும்பி பார்க்கும் போது பெருந்தோட்ட கைத்தொழில் துறை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுதமையை காணலாம். பூகோள வெப்பமாதல் தொழிலாளர் ஈர்ப்பு குறைவடைந்த நிலை மற்றும் கொவிட் -19 தொற்று நோய்பரவல் நிலை உள்ளடங்கலாக இந்த சவால்கள் முழு பெருந்தோட்ட அமைப்பபையும் சிக்கலாக்கியது. ஆனால் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், என்ற வகையில் பயிற்சி நெறியின் போது உதவியாளராக பணியை நிறைவேற்றியிருந்ததுடன் இந்த சவால்களை கண்டு பின்வாங்காமல் நிலையாக நிலைத்திருந்தது. இந்த செயலாற்றுகை அறிக்கை அதற்கு சான்றாகும்.

பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ. கலாநிதி ரமேஸ் பதிரண, கௌரவ. திருமதி. கணகா ஹெரத் பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சர்.
திரு. ரவீந்திர ஹேவவிதரரண. பெருந்தோட்ட அமைச்சின் செயலளார், திரு ஜெ.எம். திலகரத்ன பண்டார பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயபடுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சின் செயலளார். மற்றும் பெருந்தோட்ட இராஜங்க அமைச்சு மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும், நிறுவன செயல் திறனை அதிகரிக்க வழி காட்டிய எங்கள் குழுவினர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி பிராசாத் தர்மசேன, ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏனைய ஊழியர்களின் அயராத பங்களிப்பிற்காக நான் விசேட நன்றியை தெரிவித்துகொள்கின்றேன்



ஏ.எல்.ஏ.அசோக ஶ்ரீவர்தன,
தவிசாளர்,
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்
5. மே 2022.

## பணிப்பாளர் மீளாய்வு



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான அதன் வருடாந்த அறிக்கையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது, மேலும் கொவிட் 19 தொற்றுநோய்கள் நிறுவனத்தின் எதிர்கால திட்டங்கள் மற்றும் புதிய இயல்புநிலையுடன் எங்களின் முக்கிய செயற்பாடுகள் சாதனைகள் முயற்சிகள் ஆகியவற்றின் சிறப்பம்சங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**தொற்றுநோயுடன் முன்னோக்கி பயணித்தல்.**

கொவிட் 19 சூழமைவில் NIPM கல்வியில் சிறந்து விளங்குதலை உறுதி செய்துள்ளோம். அத்துடன் தொழில்துறை நிபுணர்களுடன் இணைந்து பல தொழில் சார் பயிற்சிகளை விருத்தி செய்து, அறிவித்துள்ளோம். பசுமை விவசாயம், பெருந்தோட்ட முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் பயிற்சிநெறி மற்றும் உயர்தர தேயிலை பரிசோதனை பயிற்சிநெறி ஆகியவை 2021 ஆண்டு தொடக்கம் அமுலாகிறது.

2021 ஆம் கல்வியாண்டில் தேசிய தொழிற் தராதர மட்டம் (NVQ) 5 – 6 அங்கீகாரத்துடன் பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பம் மற்றும் பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவம் ஆகிய இரண்டு ISO 9001 : 2015 தர டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர் திறனான கற்றல் கருவிகள் ஊடாக அறிவை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ரீதியில் திறமையான மற்றும் சமூக அக்கறையுள்ள நிபுணர்களை உருவாக்குவதற்காக தரமான கல்வியை வழங்குதல் மற்றும் புத்தாக்க உந்துதல், தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல் மூலம் நாட்டின் முன்னணி கல்வி / தொழில்வாண்மை நிறுவனமாக இருத்தல் தொழிற்துறையின் மூலோபாய இலக்குகள் மற்றும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் செயற்படுதல் NIPM நிறுவனத்தின் பரந்த பார்வையாகும்.

NVQ அடிப்படையிலான கல்வி முறைமையின் திறனை விருத்தி செய்யும் நோக்கில் புதிய தேயிலை ஆய்வுகூடத்துடனான முழுமையான மாதிரி தேயிலை பதப்படுத்தல் நிலையத்தை நிறுவனம் உருவாக்கியது. எனவே, கல்விக்கான செலவுகளை குறைத்தல், தேயிலையை சுவை பார்த்தல், தரப்படுத்துதல், தேயிலை உற்பத்தி பயிற்சிகள் போன்ற அனைத்து தொழில்வாண்மையான பயிற்சிகளையும் நிறுவனம் மேற்கொள்கிறது.

பெருந்தோட்டத் துறை தொழிற்துறையினரின் நிபுணத்துவத்தை அங்கீகரித்து, விருத்தி செய்வதற்கு தேவையான நிறுவனத்தின் நிபுணத்துவ அங்கத்துவம் ஓர் வலுவான கருவியாகும். சமகால அங்கத்துவர் முறைகளை உருவாக்குவதற்காக நிறுவனத்தின் சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது. 2021 ஆம் கல்வியாண்டில் 9 கௌரவ அங்கத்தவர்கள், 11 சம அங்கத்தவர்கள் மற்றும் 5 இணை அங்கத்துவங்களையும் வழங்கியுள்யோம்.

சுயாதீனமாக பட்டம் வழங்கும் நிறுவனமாக நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள உயர்கல்வி அமைச்சின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக மூன்று பாடநெறிகள் மற்றும் நிறுவனத்தின் மீளாய்வு ஆகியவற்றை நிறைவு செய்துள்ளோம். இரத்மலானை தொழிற்கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் திறமை அடிப்படையிலான பட்ட கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதற்கமைய,

அத்துருகிரியவில் அமைந்துள்ள பிரதான வளாகத்தில் உத்தேச நிர்வாக மற்றும் கல்வி வளாகத்தை விரைவாக நிறைவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டமை தொடர்பில் நிறுவனம் பெருமை அடைகிறது. இந்த நிறுவனம் பட்டம் வழங்கும் நிறுவனமாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

**செயல்திறன் சிறப்பம்சங்கள்**

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள், சிறு தோட்ட உரிமையாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எதிர்காலத்துக்கு ஒளியேற்றும் சாத்தியமான நடுகை தொழில்வாண்மையாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளரின் வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்காக சர்வதேச சமூகம் முழுவதிலும் எமது திட்டத்தை விரிவாக்க திட்டமிட்டுள்ளோம். அதன் அடிப்படையில் 13 ஆண்டு உத்தரவாத கல்வி திட்டத்துடன் 3428 மாணவர்கள் பயிற்றுவித்து 56 வருமானம் ஈட்டும் திட்டங்களை மேற்கொண்டோம். மேலும் 2021 ஆம் கல்வியாண்டில் பயிற்சி பெற்ற மொத்த சிறுதோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை 3751 ஆகும்.

2021 ஆம் ஆண்டில் NIPM நடவடிக்கைகளின் சிறப்பம்சமாக வெவ்வேறு கற்கைகளுக்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் சதவீதம் 476 % வரை அதிகரித்தது. கொவிட் 19 தொற்று நோய் நிலைமை இருந்த போதிலும் தொற்றுநோய் நிலைக்கு உகந்த வகையில் பெருமளவான வெப்மினார்கள் நடத்தப்பட்டன. நிறுவனம் பாடநெறிகள் மூலம் ரூபா 26.32 மில்லியன் உழைத்ததுடன், பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 77 % ஆக பதிவாகியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 0.44 மில்லியன் வருமான மதிப்பீடு செய்யப்பட்ட 13 பயிற்சிப் பட்டறைகள் மற்றும் வெபினார்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 35 பாடநெறிகளை நடத்தியதன் மூலம் 3.434 மில்லியன் வருமானம் கிடைத்தது. 8 முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகளில் 35 பேர் பங்குபற்றுவார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பாடநெறிகளில் 377 பேர் பங்குபற்றியது சாதனையாகும். NIPM மொத்தமாக கல்விசார் வருமானமாக 28.96 மில்லியன் ரூபாய்களை ஆட்டியது. அது கல்விசார் நிதி முன்னேற்றத்தின் 56 % ஆகும். ஒதுக்கீட்டில் நிறுவனம் சிறு தோட்ட துறைக்கான 50 திறன் விருத்தி திட்டங்களை நடத்துவதற்கு மதிப்பிட்டுள்ளது மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயமாகும் நிறுவனம் 14 திட்டங்களை நடாத்திய சாதனைகளை காட்டுகிறது. NIPM உழைத்த வருமானம் ரூபா 45.95 மில்லியனாக பதிவாகியுள்ளது. இது கல்விசார் நிதி முன்னேற்றமாகும். மொத்த அரச மானியமாக 93.37 மில்லியன் ரூபாய் பெறப்பட்டது. 2021 ஆண்டின் இறுதியில் தேறிய சொத்துக்கள் 1045.53 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. நிறுவனம் 35.15 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களும், 1.61 மில்லியன் பெறுமதியான கட்புலனாகா சொத்துக்களும் 2021 நிதி ஆண்டில் பதிவாகியுள்ளது.

2.28 மில்லியன் ரூபாய் மற்றும் மீண்டெழும் செலவாக 120.62 மில்லியன் பதிவாகி நிறுவனம் 2020 ஆண்டுடன் ஒப்பீடாக 6 % அதிகரிப்பை காட்டியது. 2020 நிதி ஆண்டுடன் ஒப்பீடாக அலுவலக வேலை நாட்களின் அதிகரிப்பு காரணமாக அந்த மீண்டெழும் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. உலகளாவிய பெருந்தொற்று மற்றும் ஏனை புற சூழமைவுகள் காரணமாக நிறுவனத்தின் முதன்மை பணியான பயிற்சி தொடர்பில் மெதுவாக பயணிக்கும் நிலை ஏற்பட்டது.

**தொற்றுநோய் காரணமாக ஆண்டு முழுவதும் அழுத்தத்துக்கு உள்ளானது.**

கொவிட் 19 நெருக்கடி நபர்கள் மற்றும் சமூகம் என்ற வகையில் நாமும் வீழ்ச்சியடைந்து, மன அழுத்தத்துக்கு உள்ளான நிலையில் இருக்கிறோம் என்பதுடன், நிறுவனம் என்ற ரீதியில் அந்த சவால்களுக்கு சிறப்பாக முகங்கொடுக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த சவால்களை

எதிர்கொள்வதற்காக எதிர்காலத்தில் கலப்பு முறையில் கல்வி வழங்குவதற்கான இயலளவை கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. தேவைக்கு ஏற்ப வகுப்பறை மற்றும் நிகழ்நிலை கற்பித்தல் முறைக்கு மாறுவதற்கு கல்விசார் ஊழியர்கள் விசேடமாக தயாரக இருக்கவேண்டும். இது எதிர்காலத்தில் தொற்றுநோய்பரவல் நிலைமையின் போது மட்டுமன்றி இயற்கை பேரழிவுகள் மற்றும் பாதகமான வானிலை காணப்படும் சந்தர்ப்பங்களினால் ஏற்படுத்தகூடிய இடையுறுகளால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளின் போது மாணவர்களின் கல்வியை பாதுகாக்கும். கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான தனிப்பட்ட அணுகுமுறைகளுக்கான வாய்ப்புக்களையும் இது உருவாக்கும். இதனை கருத்தில்கொண்டு நேரிலோ அல்லது இணையத்திலோ கற்ப்பிக்க கூடிய நெகிழ்வான பாடத்திட்டங்களை உருவாக்குவது அவசியமாகும். அதற்கு மேலதிகமாக எங்கள் விரிவுரையாளர்கள் எதிர்காலத்தில் நாடு மூடப்படும் சந்தர்ப்பத்தில் பரந்த அளவிலான தகவல் தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்துவதற்கு தயாராக இருக்க வேண்டும் மற்றும் எங்கள் பங்கேற்பாளர்களில் பெரும்பாலானோர்கள் நாடு முழுவதும் பரந்து இருப்பதால் நிகழ்நிலை முறையில் விரிவுரைகளை நடத்துவது கட்டாயமாகும்.

**சரியான திசையில் வலையமைப்பு**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் நாட்டிலுள்ள அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் வலுவான, வினைத்திறனான விரிவாக்கல் சேவை வலையமைப்பை கொண்டுள்ளது. இது பெருந்தோட்ட உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் செயற்பாட்டாளர்களுக்கு மிக பிந்திய தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்களை விரிவுபடுத்துகிறது. இந்த அலகுகள் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் செழுமைப்படுத்தல், விவசாயிகளுக்கான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் RPCs இன் கீழான நோய் கண்டறியும் களப்பயணங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள், செய்துகாட்டல்கள், குழு கலந்துரையாடல்கள் மற்றும் வெளிக்கள தினம் போன்ற முக்கியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பெருந்தோட்ட துறையினரை தெளிவுபடுத்தவதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான கருமங்களாகும்.

இந்த கலண்டர் ஆண்டின் ஆரம்பத்தில், உலகளாவிய தொற்றுநோய் நிலைக்கு மத்தியில் எமது ஆற்றலை அடையாளம் கண்டோம். இப்போது எமது வாழ்க்கை காலத்தில் மனிதாபிமானத்தை அனுபவிக்கும் மிகவும் சவால்மிக்க காலமாக அமையலாம். நெருக்கடியின் ஆரம்பத்தில் எமது கல்வி கலண்டரை மீள ஒழுங்குபடுத்தியதுடன், மதிப்பீட்டுத் திட்டங்களை இற்றைப்படுத்தி, எமது சாதாரண பாடநெறிகளை நிகழ்நிலை அடிப்படையில் மேற்கொண்டோம். பல்வேறு பாடநெறிகள் தொடர்பில் நிறுவன பாடநெறிகளை மறுசீரமைத்து ஒருங்கிணைப்பு செய்வதற்காக கல்வி சபையை நிறுவினோம். இந்த கூட்டான முயற்சியில் வெற்றி பெறுவதற்காக எம்முடன் இணைந்து பாடநெறி மாணவர்களும் நெகிழ்வுத்தன்மையுடன் எமக்கு வாய்ப்பு வழங்கினார்கள்.

அதற்கமைய, நாட்டில் உள்ள பல்வேறு தொழில்த்துறை தொழில்நுட்ப முகாமைத்துவ மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் செயற்திறனாக தொடர்பிலிருந்தோம் இந்த நல்லுறவை மேற்கொள்வதன் இரட்டை நோக்கம் மாணவர்களுக்கு போதுமான தொழில்நுட்ப வெளிப்பாடு, தொழில்துறை பயிற்சி அளிக்கப்படுதல், அதன்பின் அவர்களின் அபிலாசைகள் மற்றும் நோக்கங்களுடன் பொருந்தகூடிய நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெறுவதையும் உறுதிசெய்வதாகும். எமது மாணவர்களில் பெரும்பாலானோர் பல்வேறுவகையான வேலைவாய்ப்பு நிலையங்களில் தொழில்துறையில் உள்ளனர்.

**மூலோபாய வளர்ச்சி இலக்குகள்**

2022 ஆண்டளவில் இந்த துறையுடன் இணைக்கப்பட்டுள்ள மனித வளத்தின் ஆற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பெருந்தோட்ட தொழில் துறை தொடர்பான தேசிய தொழில் தராதரத்தை (NVQ) மேம்படுத்துவதன்

மூலம் மூன்று பட்டம் வழங்கும் பாடநெறிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. 2022 ஆண்டளவில் நிறுவனம் இந்த பணியை நிறைவேற்ற திட்டமிட்டிருந்தாலும் பல்வேறு நியாயமான காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் தாமதமானது. தொழில்துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தலின் பேண்தகு தன்மைக்கு முக்கியமான பங்கு வகிக்கும் எமது அடுத்த இடைக்கால திட்டத்தின் மூலம் சுயாதீன பட்டம் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

2020 - 2024 மூலோபாய இலக்குகளை அடுத்த நான்கு ஆண்டுகளில் அடையவதற்காக நாம் செயற்பட வேண்டிய முறை தொடர்பான கண்ணோட்டம் பின்வருமாறானதாகும். அவையாவன,

- பெருந்தோட்ட துறை கல்விசார் நிபுணர்கள் / தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கான சமகால பெறுமானமுள்ள பாடநெறிகளை அறிமுகம் செய்தல்.
- தொழிற்துறைக்கு தரமான சேவைகளை வழங்குவதற்காக கல்வி பீடத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின் வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- சந்தைப்படுத்தல் மற்றும் பிரச்சாரத்தை வலுப்படுத்தும் அதேவேளை, நிபுணத்துவத்தை மேம்படுத்தும் கல்வித் தீர்வுகளுடன் சிறந்து விளங்குவதற்கான நற்பெயரை மேம்படுத்துதல்.
- தர முகாமைத்துவ முறைமை (QMS) ISO தர நிலைகள் மற்றும் தர முகாமைத்துவ அமைப்புகளுடன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பசுமை சூழலை உருவாக்குதல்..

வெளிப்படையாக, நிறுவனத்தில் அதன் ஆசிரியர்கள், ஊழியர்கள் அத்துடன் அதன் நலன் விரும்பிகள் மற்றும் ஆதரவாளர்கள் உண்மையிலேயே பெருமைப்படக்கூடிய விடயங்கள் பெருமளவில் உள்ள போதிலும், பிராந்திய நிலையங்களின் முன்னேற்றம் மற்றும் பயன்பாடு போதுமானதாக இல்லை என்பது உண்மை இருப்பினும் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாங்கள் ஏற்கனவே சிறப்பாக மேற்கொண்ட விடயங்களை தொடர்ந்து மேற்கொள்வோம். நிறுவனம் கவனம் செலுத்தும் பின்வரும் புதிய பகுதிகளில் விருத்திசெய்ய வேண்டிய தேவையுள்ளது.

1. சிறந்த உபகரணங்களை கொண்ட நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்தல் பல தசாத்தங்கள் நின்று நிலைத்திருக்கும் கல்விசார் செயற்பாடுகளுக்கு உகந்ததாக அமையும்.

2. நிறுவனத்துக்கு பெருமை சேர்க்கக்கூடிய அனுபவம் மிக்க மிகச்சிறந்த பிரயோக அறிவுடையவர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.

3. பெருந்தோட்ட தொழில்துறையில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதன் மூலம் சிறப்பாக செயற்படும் நிலையமாக இருத்தல். இருப்பினும், அதற்கான நிதி இயலுமை நிறுவனத்திடம் இல்லாதிருப்பதனால் நிதி திரட்டுவதற்கான நமது முயற்சிகளை கணிசமாக அதிகரிக்க வேண்டும்.

4. புலமைசார் உலகம் மற்றும் மூலோபாய தொழில்துறை கூட்டு முயற்சிகளை உருவாக்குதல். உலகின் உயர்மட்ட பல்கலைக்கழகங்களின் பங்காளர்களாக இருக்க விரும்பும் அதேவேளை இலங்கையில் சிறந்த பட்டதாரிகளை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட விரும்புகிறோம்.

**நன்றியுடன் நிறைவு**

நிறைவாக, நிறுவனம் முன்னேற்றமடைய வழிகாட்டல் மற்றும் ஆதரவு வழங்கிய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்,

பெருந்தோட்ட கம்பனிகள் மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்ட பயிர்செய்கை, தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சர். பெருந்தோட்ட அமைச்சின் செயலளார், பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சின் செயலளார், பெருந்தோட்ட இராஜங்க அமைச்சு மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் ஏனைய அலுவலர்கள் NIPM குடும்ப உறுப்பினர்களுக்கும் விஷேடமாக நிறுவனத்தின் தவிசாளர்க்கும் இந்த ஆண்டு வெற்றி பெறுவதற்காக வழங்கிய பெரும் ஆதரவுக்கு நன்றி தெரிவக்கிறேன்



**ஒப்பம்.**
**கலாநிதி. கே.எச்.ஜி.எம்.பிரசாத் தர்மசேன,**
**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர்**
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

# நிறுவனத்தின் உருவாக்கம் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்கள்

அறிமுகம்



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 1979 ஆம் ஆண்டின் 45 இலக்க சட்டத்தின் மூலம் 1979 ஆம் ஆண்டு ஜூலை நிறுவப்பட்டது. NIPM நிறுவனத்தினை அரசாங்கத்தின் சட்டரிதியான அமைப்பான, மிகவம் பயனுள்ள சாத்தியமான நிறுவனமாக மாற்றியமைக்க 1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாகவும் 1987 ஆண்டின் இல.05 சட்டம் மற்றும் 2003 ஆண்டின் இல.38 சட்டம் ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டது. வளாகம் எம்.டி.எச் ஜெயவர்தன மாவத்தை, அத்துருகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

இந்த சட்டத்துக்கு அமைவாக பயிற்சிநெறிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கவும் மற்றும் மூன்று (03) முக்கிய பிரிவின் கீழ் தகுதியான தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கவும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு NIPM ஆகும். இது சிறு தோட்ட உரிமையாளர்கள் உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் தொழில்சார் திறனை உயர்தரத்தில் பராமரிப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

இந்த நோக்கங்களை அடைவதற்கு, NIPM பல்வேறு பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள் செயலமர்வுகள், பரீட்சைகள் போன்றவற்றை நடத்துகிறது. அத்துடன் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு மாணவர்களுக்கான பயிற்சிநெறிகளை நடத்தும் இயலுமையினையும் கொண்டுள்ளது.

## நோக்கங்கள்:

சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டங்களிற்கு அமைவாக நிறுவனத்தின் பொதுவான நோக்கங்கள் பின்வருமாறு

I. பெருந்தோட்ட துறையில் பணிபுரியும் சகல வகையான ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய திட்டங்கள் மற்றும் பயிற்சி வசதிகளை சுயமாகவோ அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல்.

II. இந்த துறையிலுள்ள ஊழியர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் வழக்கமான, புத்துணர்ச்சி மற்றும் அறிமுக கற்கையினை வழங்குதல்.

III. பொது மற்றும் தனியார் துறை பெருந்தோட்டங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவதில் பயிற்சியளித்தல்.

IV. தேயிலை ஆராய்ச்சி நிலையம், தெங்கு ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து டிப்ளோமா கற்கைகளை பொருத்தமான பகுதிகளில் வழங்குவதல்.

V. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய கருத்தரங்கு நடத்தல், செயலமர்வுகள், மாநாடுகள் போன்றவற்றுக்கு நிதியுதவியளித்தல், ஆய்விதழ் மற்றும் சஞ்சிகைகளின் வெளியிடுதல்.

VI. இதே போன்ற வேறு அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்படாதவர்களுக்கு தொழிலாளர் உறவு மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் பகுதிகளின்னுடாக ஆய்வுகளை மேற்கொள்தல்.

VII. பெருந்தோட்ட கைத்தொழிலிலுள்ள பெருந்தோட்ட முகாமைத்துவம் கொண்டிருக்கும் மனித சக்தியின் தேவைப்பாட்டிற்கு தேவையான திறனை கொண்டுள்ள நபர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சியளித்தல்.

VIII. பெருந்தோட்ட கைத்தொழில் தொடர்பாக இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியேயுள்ள எந்தவொரு அரச திணைக்களம், பொது கூட்டுத்தாபனம் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனை சேவைகள் வழங்குதல்.

## நிறுவனத்தின் அதிகாரம்

I. ஏதாவது ஒரு வழிமுறையில் கையகப்படுத்தி மற்றும் வைத்திருக்க, குத்தகைக்கு வழங்க அல்லது எடுக்க அல்லது வாடகைக்கு, அடகு, உறுதிமொழி, விற்பனை அல்லது எந்தவொரு அசையும் அல்லது அசையா சொத்தை அகற்றுதல்.

II. தேயிலை ஆராய்ச்சி தொடர்பான மாதிரி திட்டங்கள் மற்றும் வெளிக்கள பயிற்சி நிலையங்களை கையகப்படுத்தல், நிறுவுதல், மற்றும் இயக்குதல்.

III. நிறுவனத்தின் நோக்கத்திற்கு தேவையான பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்தல் மற்றும் நிறுவனத்தின் திறன் மிக்க செயற்பாட்டடிற்கு உபகரணங்கள், பணியாளர்கள், நிதி, வேறு ஏதேனும் உதவிகளை பெற்றுக்கொள்ளல்.

IV. பெருந்தோட்ட அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களிலும் ஆராய்ச்சி நடத்தல் ஊக்குவித்தல், உதவுதல், மற்றும் ஒருங்கிணைத்தல்.

V. நிறுவனம் வழங்கும் எந்தவொரு சேவைகளுக்கும் வரி அல்லது கட்டணங்கள் அறவிடல்.

VI. பணிக்கமர்தல், தொழில் வழங்குதல் ஊதியமழித்தல், மற்றும் அதன் பணியாளர்கள் அல்லது உதவியாளர்களுக்கு ஒழுக்க கட்டுப்பாட்டை நடைமுறைபடுத்தல்.

VII. அதன் ஊழியர்களுக்கு நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் சேமலாப நிதியை உருவாக்கி பராமரித்தல்.

VIII. நிறுவனத்தின் நிர்வாக விவகாரங்களிற்கு அமைவாக விதிகளை உருவாக்குதல்.

IX. ஆளுநர் சபை அவசியமானதாக கருதினால் எந்தவொரு உறுப்பினர், நிறுவன பணிப்பாளர் அல்லது எந்தவொரு ஊழியரும் பிரதிநிதியாக செயற்பட்டு அதன் வணிகத்தினை வினைத்திறன்மிக்க பரிமாற்றத்தில் ஈடுபடுத்துதல்.

X. அங்கத்துவத்தின் பல்வேறு தரத்திற்கான நுழைவுக்காக விண்ணப்பதாரர்களின் தகுதியினை மதிப்பீடுசெய்யதல் மற்றும் நிறுவனத்தின் அங்கத்துவதற்கு அல்லது அனைத்து தரத்திற்கான தகுதிப்பரீடசையினை நடத்துவதற்கும் அல்லது வழங்குவதற்கும் மற்றும் அதுபோன்ற பரீட்சைக்கான கற்கைநெறிக்கு அனுமதியளித்தல் அல்லது வழங்குதல்.

XI. அதன் உறுப்பினர்களின் பொது நடத்தை மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளில் உயர்தரத்தை பேணுவதலை உறுதி செய்தல்.

XII. பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதலீட்டை ஊக்குவித்தல்.

XIII. பெருந்தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பில் தரவுகளை சேகரித்தல், விரிவாக்கம் செய்தல் மற்றும் பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்கான சாத்திய தன்மையினை அறிய ஆராய்ச்சிகளை நடத்துதல்.

XIV. பெருந்தோட்ட முகாமைத்துவத்துக்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் தொடர்புடைய முகவர்களை ஒருங்கிணைத்தல் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

## ஆளுநர் சபையின் அறிக்கை

2021 ஆம் ஆண்டுகாலத்தில், NIPM அத்துருகிரியவில் பின்வரும் ஆளுநர் சபையின் பொறுப்பினை மேற்பார்வை செய்யும் ஒன்பது (09) கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- நிறுவன நடவடிக்கைகளின் அனைத்து செயற்பாடுகளுக்கும் உயர்ந்த மட்ட இணக்கம் பின்பற்றப்படுதலை உறுதி செய்தல்.
- வெளிப்படைத்தன்மையின் உயர் தரத்தை பேணுவதன் விளைவாக செயற்பாடுகள் மற்றும் அனைத்து பயிற்சி நடவடிக்கைகளிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்.
- நிறுவனத்தின் வளங்களை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் வழிநடத்தி விரும்பத்தக்க சிறந்த வெளியீட்டை அதன் பங்குதாரர்களுக்காக கொண்டுவருதல்.
- நிறுவனதின் மத்திய மற்றும் நீண்டகால தந்துரோபாயம், வருடாந்த பாதீடுகள், செயல்முறை திட்டம் மற்றும் கணிசமான நிதியுடனான செயற்பாட்டு கொள்கைகள் என்பனவற்றை அனுமதிப்பதன் மூலம் வழிகாட்டுதல்.

1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தினுடாகவும் 1987 ஆண்டின் இல.05 சட்டம் மற்றும் 2003 ஆண்டின் இல.38 சட்டம் ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் சட்ட இல. 45 NIPM இன் 06 அத்தியாயத்திற்கு அமைவாக பின்வரும் உறுப்பினர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் ஆளுநர் சபை ஆக கருதப்படுவார்கள்.

## ஆளுநர் சபை தொகுப்பு

| சபை உறுப்பினர் பெயர் | பதவி | சபை உறுப்பினர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **திரு. ஏ.எல்.ஏ.அசோக்க ஸ்ரீவர்தன**<br>தவிசாளர்/ NIPM | தவிசாளர் | **திரு. மகிந்த விதானபதிரண**<br>தவிசாளர் / TSHDA | உறுப்பினர் |
| **கலாநிதி. பிரசாட் தர்மசேன**<br>பணிப்பாளர் /CEO NIPM | உறுப்பினர் | **கலாநிதி. காஞ்சன சில்வா**<br>பணிப்பாளர் / CEO துருசவிய நிதியம் | உறுப்பினர் |
| **திருமதி. அருனி எஸ். ரணசிங்கே**<br>மேலதிகச் செயலாளர் / பெருந்தோட்ட அமைச்சு | உறுப்பினர் | **திரு. எஸ்.கே.எல். ஒபேயசேகர**<br>பொதுச் செயலாளர் / TPAC | உறுப்பினர் |
| **கலாநிதி. எல்.எஸ்.கே. ஹெரியாரச்சி**<br>பணிப்பாளர் / தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் | **திரு. பீ.ஏ.எம். தெரணியகல**<br>பிரதிநிதி / CGASL | உறுப்பினர் |
| **கலாநிதி. (திருமதி). சீ. எஸ் ரணசிங்கே**<br>பணிப்பாளர் / தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் | உறுப்பினர் | திரு. சந்திம விக்கிரமசிங்ஹ<br>தலைவர் / SLTFOA | உறுப்பினர் |
| **திருமதி. எஸ். என் மீதலாவ**<br>பணிப்பாளர், / தேசிய பாதீட்டு திணைக்களம் | உறுப்பினர் | | |

- திருமதி. அருனி எஸ். ரணசிங்கே (மேலதிக செயலாளர் / பெருந்தோட்ட அமைச்சு) 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விலகிச் சென்றார்.
- திருமதி. கே.ஏ.எச். லக்தரணி (பிரதி பணிப்பாளர் / திட்டமிடல் - பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சு) 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- திரு. பீ.ஏ.எம். தெரணியகல மரணமடைந்தமை காரணமாக 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிருந்து வெளயேறினார்.
- பேராசிரியர் தீபால் மத்தியூ (பிரதிநிதி / இலங்கை தெங்கு பயிர்ச்செய்கையாளர்கள் சம்மேளனம்.) 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- திரு. மஹிந்த விதானபத்திரண (தலைவர் / சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை) பதவிக் காலம் முடிவடைந்தமை காரணமாக 2021 ஜூலை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிலிருந்து விலகினார்.
- கலாநிதி. எம்.எஸ்.ரி. பிரியதர்ஷன (தலைவர் / சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை) 2021 செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிலிருந்து நியமிக்கப்பட்டார்.
- திரு. சந்திம விகரமசிங்க (தலைவர் / தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சம்மேளனம்) பதவிக் காலம் முடிவடைந்தமை காரணமாக 2021 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டு, பதவிக் காலம் முடிவடைந்தமை காரணமாக 2021 டிசம்பர் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிலிருந்து விலகினார்.
- திரு. அனுர அத்துக்கோறள (பிரதிநிதி / தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சம்மேளனம்) 2021 டிசம்பர் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் (AMC) அறிக்கை

நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்க உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்காய்வு, முகாமைத்துவ திட்டத்துக்கு பின்வருவனவற்றை மேற்பார்வை செய்யவதற்கு அதிகாரத்தை பணிப்பாளர் குழு முறையாக வழங்கியுள்ளது.

- நிறுவனத்தின் நிதி அறிக்கையிடுதல்.
- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை உறுதிசெய்தல்.
  கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பதில்களுக்கான பரிந்துரைகள்.
- பெறுகை குழு தீர்மானங்கள், மூலதன பயன்பாடு மற்றும் மீண்டெழும் செலவு மீளாய்வு.
- பாதீட்டு மதிப்பீடு மற்றும் உண்மையான செயல்திறன் முன்னேற்றம்.
- மேலதிக நேர கொடுப்பனவு, எரிபொருள், தொலைபேசி மற்றும் மின்சாரம் போன் செலவுகளை பாதீட்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுதல்.
- பயிற்சிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான செலவுகள்
- நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய நிதி நடவடிக்கைகள்.

2021 மார்ச் 26, ஆகஸ்ட் 10, செப்ரெம்பர் 29, நவம்பர் 20 மற்றும் டிசம்பர் 30 ஆகிய திகதிகளில் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடைபெற்றன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்**

| உறுப்பினர் பெயர் | பதவி | உறுப்பினர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **திருமதி. எஸ். என் மீதலாவ**<br>பணிப்பாளர், / தேசிய பாதீட்டு தினைக்களம் | தவிசாளர் | **திரு. மகிந்த விதானபதிரண**<br>தவிசாளர்/ TSHDA; | மாற்று உறுப்பினர் |
| **திருமதி. அருனி எஸ் ரணசிங்கே**<br>மேலதிகச் செயலாளர் / MPI | உறுப்பினர் | **கலாநிதி. பிரசாட் தர்மசேன**<br>பணிப்பாளர் / NIPM | பணிக்குழாம் உறுப்பினர் |
| **கலாநிதி. காஞ்சனா சில்வா**<br>பணிப்பாளர்/ CEO துருசவிய நிதியம் | உறுப்பினர் | **திரு. எல்.டீ.ஜெ. பிரியந்த**<br>கணக்காளர் / NIPM | பணிக்குழாம் உறுப்பினர் |
| **திரு. ஆர்.எம்.எஸ். பெரேரா**<br>கணக்காய்வு அத்தியட்சகர் /NAO | கண்காணிப்பு உறுப்பினர் | **திரு. கே.எச்.யு.பீ. விஜேவீர**<br>உள்ளக கணக்காய்வாளர்/ NIPM | செயலாளர் /AMC |

- திருமதி. திருமதி. அருனி எஸ் ரணசிங்கே மேலதிகச் செயலாளர் / பெருந்தோட்டத்துறை அமைச்சு) 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விலகிச் சென்றார்.
- திருமதி. கே.ஏ.எச். லக்தரணி (பிரதி பணிப்பாளர் / திட்டமிடல் - பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சு) 2021 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்.
- திரு. மஹிந்த விதானபத்திரண (தலைவர் / சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை) பதவிக் காலம் முடிவடைந்தமை காரணமாக 2021 ஜூலை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிலிருந்து விலகினார்.
- கலாநிதி. எம்.எஸ்.ரி. பிரியதர்ஷன (தலைவர் / சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை) 2021 செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையிலிருந்து நியமிக்கப்பட்டார்.

நிதி அமைச்சின் பிரதிநிதி திருமதி. எஸ். என் மீதலாவ கணக்காய்வு, முகாமைத்துவ குழுவுக்கு தலைமை வகித்தார். மேற்கூறிய நிறைவேற்று மற்றும் நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்கள் 2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் சேவையாற்றினார்கள்.

**நிறுவனத்தின் பணியாளர்கள்**

ஆட்சேர்ப்பு திட்டத்துக்கமைய கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் பொறுப்பில் செயற்படுகிறார். அவரது தலைமையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த ஆளணி 55 நிரந்தர பணியாளர்களாக இருந்தனர். நிறுவனம் கல்வி, நிதி, நிர்வாகம், பரீட்சை மற்றும் கணக்காய்வு ஆகிய ஐந்து பிரதான பிரிவுகளின் கீழ் செயற்படுகிறது.

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**



**ஏ.எல்.ஏ.அசோக ஸ்ரீவர்தன**
**தலைவர்**



**கலாநிதி. பிரசாட் தர்மசேன**
பணிப்பாளர் / CEO

## கல்வி பிரிவு

கல்வி பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



**திருமதி. எஸ்.என்.இல்லன்ஹதிலக**
தலைவர் - பயிற்சி



**திரு.ரி.எச். ஜயதிலக்க**
பயிற்சி நிபுணர்
கணக்கியல், நிதி
முகாமைத்துவம்.



**திருமதி. ஆர் என். லெக்குகெட்டி**
பயிற்சி நிபுனர்
(முகாமைத்துவம்)



**திரு. ஏச்.எம்.வி.எஸ். பண்டார.**
பயிற்சி அலுவலர



**திரு.பீ.டபிள்யு.ஜி.என்.சீ. வீரக்கோன்**
பயிற்சி அலுவலர்
(முகாமைத்துவம்)



**திரு.N.S.கெரியாராச்சி**
நூலகர்

## நிர்வாக பிரிவு

நிர்வாக பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



**திரு M.L.R.ஜயந்த**
நிர்வாக
உத்தியோகத்தர்



**திரு M.L.R.ஜயந்த**
நிர்வாக
உத்தியோகத்தர



**திரு .B.M.A.L.பண்டாரநாயக்க**
ஹெட்டல் முகாமையாளர்-
அத்துருகிரிய



**திரு மஞ்சுல பண்டார**
ஹெட்டல் முகாமையாளர
பேகவந்தலாவ



**திருமதி யசோத விஸயசேகர**
கொள்வனவு உதவியளர்

## கணக்கீட்டு பிரிவு

கணக்கீட்டு பிரிவிலுள்ள பணியாளர்கள் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



**திரு. L.D.J. பிரியந்த**
கணக்காளர்



**திருமதி. N.L.சேனதிரா**
உதவி காணக்காளர்

**<u>பரீட்சைப் பிரிவு</u>**

பரீட்சைப் பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



**திரு D.I.P.குலசேகர**
பயிற்சி உத்தியோகத்தர்
விவசாயம் பொருளியல்



**திருமதி . J.A.D.G.M.இந்திராணி**
நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்
பரீட்சை இணைப்பாளர்

**<u>உள்ளக கணக்காய்வு பிரிவு</u>**



**திரு. K.H.U.P.விஜயவீர**
உள்ளக கணக்காய்வாளர்

31/12/2021 உள்ளவாறான உண்மையான மொத்த ஆளணி விபரம் பின்வருமாறு

| Designation | Salary Code | Approved Cadre | Existing Cadre | Vacant |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | HM 1.2 | 01 | 01 | - |
| உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | MM 1.1 | 01 | 01 | - |
| கணக்காளர் | MM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி நிபுணர் (விவசாய பொருளியல்) | MM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) | MM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி நிபுணர் (முகாமைத்துவம்) | MM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி நிபுணர் (பெருந்தோட்ட முகாமைத்துவம்) | MM 1.1 | 01 | - | 01 |
| உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல் மற்றும் திட்டமிடல்) | MM 1.1 | 01 | - | 01 |
| நிர்வாக அலுவலர் | JM 1.1 | 01 | 01 | - |
| விடுதி முகாமையாளர் | JM 1.1 | 02 | 02 | - |
| பயிற்சி அலுவலர் (விவசாய பொருளியல்) | JM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) | JM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்) | JM 1.1 | 01 | 01 | - |
| பயிற்சி அலுவலர் (பெருந்தோட்ட பொறியியல்) | JM 1.1 | 01 | - | 01 |
| திட்ட அலுவலர் (பரிட்சை மற்றும் ஒருங்கிணைப்பு) | JM 1.1 | 01 | - | 01 |
| உள்ளக கணக்காய்வாளர் | JM 1.1 | 01 | 01 | - |
| நூலகர் | JM 1.1 | 01 | 01 | - |
| கணக்கிட்டு உதவியாளர் | MA 3 | 01 | 01 | - |
| பெறுகை உதவியாளர | MA 3 | 01 | 01 | - |
| சேவிப்புல, கட்புல உதவியாளர் | MA 2.1 | 01 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 1.1 | 17 | 16 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 அமைய நிரந்தர, ஆளணியினர்.) | MA 1.1 | 03 | 03 | - |
| சாரதி | PL 3 | 07 | 05 | 02 |
| சாரதி (பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 அமைய நிரந்தர, ஆளணியினர்.) | PL 3 | 01 | 01 | - |
| சமையலாளர் | PL 2 | 02 | - | 02 |
| அலுவலக பணியாளர் | PL 1 | 05 | 05 | - |
| ஆச்சிடல் உதவியாளர் | PL 1 | 01 | 01 | - |
| விடுதி பணியாளர் | PL 1 | 05 | 03 | 02 |
| தோட்ட பணியாளர் | PL 1 | 05 | 02 | 03 |
| தோட்ட பணியாளர் (நிரந்தர ஆளணியினர்) | PL 1 | 01 | 01 | - |
| சுகாதார தொழிலாளி | PL 1 | 01 | - | 01 |
| சுகாதார தொழிலாளி (நிரந்தர ஆளணியினர்) | PL 1 | 01 | 01 | - |
| மொத்தம் | | **70** | **55** | **15** |

**நிர்வாக பிரிவின் மீள்ளாய்வு**

உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) நிர்வாகத்தின் தலைவர் ஆவார். அவர் நிறுவனத்தின் பொதுவான நிர்வாகத்துக்கு பொறுப்பானவர். ஊழியர் ஆட்சேர்ப்பு, மனிதவள மேம்படுத்தல் போன்ற பணியாளர்களுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் நிர்வாக பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டிடங்களின் புணர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் உள்ளடங்கலாக அனைத்து பெருட்களின் கொள்முதல் நடவடிக்கை இந்த பிரிவினால் வழிநடத்தப்படுகிறது. நிறுவனம் தங்குமிட வசதிகளை அத்துருகிரிய மற்றும் பொகவந்தலாவ மத்திய நிலையங்களினுடாக ஏனைய நிறுவனங்களுக்கு அத்தகைய தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் வழங்குகின்றது. வாடகைக்கு வழங்கும் செயற்பாட்டிலிருந்து உழைக்கும் வருமானத்தை அதிகரிக்க நிறுவனம் தனது சேவையின் தரத்தை மேலும் அதிகரிக்க ஏற்பாடுகளை செய்துள்ளது. 2021 ஆண்டு காலப்பகுதியில், ஆளணி பதவி வெற்றிடங்கள் காணப்படுமாயின் அதனை அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய நிறுவனத்தால் பூர்திசெய்யமுடியும்.

## ஊழியர் நன்மைகள்

ஊழியர்களின் தொழில் வளர்ச்சியை விருத்திசெய்வதற்கு ஊழியர்களின் வேண்டுகோளுக்கு அமைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சிநெறிகளை வழங்கி சேவையில் அவர்களது அறிவு, திறனை முன்னேற்றுவதற்கு முகாமைத்துவம் அவர்களுக்கு வழிகாட்டியது. 2020 முன்னர் மேலோங்கியிருந்த நிறுவன நலன்புரி திட்டம், 2021 ஆம் ஆண்டும் தொடரப்பட்டது.

**பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDGs)**

நிறுவனம் 2030 ஆண்டில் அடையவேண்டிய SDGs இலக்குகளுக்காக செயற்படுகிறது.

| SDG இல. | இலக்கு இல. | விபரம் |
|---|---|---|
| 4 | 4.3 | 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் பல்கலைக்கழகங்கள் அடங்கலாக தாங்கிக்கொள்ளக்கூடிய, தரமான தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, நுழைவதற்கான சமமான வாய்ப்புகளை உறுதி செய்தல். |
| 4 | 4.4 | 2030 ஆம் ஆண்டளவில் வேலைவாய்ப்பு, கண்ணியமான வேலை மற்றும் தொழில் முனைவு போன்றவற்றுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் திறன்கள் அடங்கலாக தொடர்புடைய திறன்களை பெற்ற இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோரின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தல். |
| 8 | 8.2 | பல்வகைப்படுத்தல், தொழில்நுட்ப மேம்படுத்தல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் ஊடாக அதிகமான பொருளாதார உற்பத்தித்திறனை அடைவதற்காக பெறுமதி சேர்த்தல் மற்றும் கூடுதலான உழைப்பை ஈர்க்கும் அடங்கலான துறைகளைள மேம்படுத்துதல். |
| 8 | 8.6 | 2030 ஆம் ஆண்டுக்குள் வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சி போன்றவற்றை பெற்றிராத இளைஞர்களின் விகிதத்தை பேண்தகு மட்டத்துக்கு குறைத்தல். |




TS - பயிற்சி நிபுணர் .TO - பயிற்சி அலுவலர் AE - விவசாய பொருளாதாரம் A&FM - கணக்கீடு நிதி முகாமைத்துவம் Mgt. - முகாமைத்துவம் E & C. -பரீட்சை & ஒருங்கிணைப்பு

COE - பரீட்சை கட்டுப்பாட்டாளர் * தர கட்டுப்பாட்டு அலகு தலைவர் ** அடக்கப்பட்டது

**நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகள்**



பயிற்சிநெறிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கல் மற்றும் தகுதியான பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் (NIPM) ஆகும். தேயிலை, இறப்பர், கரும்பு, மரமுந்திரிகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்செய்கையில் ஈடுபடும் சிறு தோட்ட துறை உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் உயர்தர தொழில்சார் திறனை பராமரிப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதை இலக்காக கொண்டுள்ள நிறுவனத்தின் முதன்மை செயற்பாடுகள் 07 பிரதான பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு கீழே பட்டடியலிடப்பட்டுள்ளது.

**(அ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்**

கல்வி கற்கைநெறிகள் குறிப்பாக பங்குபற்றுபவர்களின் திறன்களை உயர்த்துதல் மற்றும் அவர்களது ஆற்றலை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கற்கைநெறிகளுக்கான சான்றிதழ்களை வழங்குவதற்காக பங்குபற்றுபவர்கள் திருப்திகரமான கல்வி பதிவை பேணியிருக்க வேண்டும். அத்துடன் அவர்களால் உள்வாங்கப்பட்டுள்ள பாட தொகுதிகளில் குறிப்பிட்டுள்ள கடமைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

கல்வி திட்டங்கள் என்ற வகையில் பின்வரும் கற்கைநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- பெருந்தோட்ட முகாமைத்துவம் B.Sc. பட்டம் (வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து).
- பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா.
- பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்பிளோமா. ( NVQ பாடநெறிகள் மட்டம் 06)
- பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா.
- பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. ( NVQ பாடநெறிகள் மட்டம் 05)
- பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா.(பண்ணை பயிலுனர்)



- தெங்கு பயிர்ச்செய்கை மற்றும் பதப்படுத்தல் உயர்தர சான்றிதழ் பாடநெறி.
- பெருந்தோட்ட கணக்கீடு, நிதி மற்றும் கிரய முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் பாடநெறி. (CMA உடன் இணைந்து)
- கணக்கு பதிவு மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி.
- நுண்நிதி சான்றிதழ் கற்கைநெறி
- NVQ பாடநெறிகள் மட்டம் 4

**(ஆ) தொழில்சார் கற்கைநெறிகள்**

தொழில்சார் கற்கைநெறிகளை நடத்துவதற்கான பிரதான நோக்கம் தர்க்கரிதியான / செயல்முறை ரிதியான அறிவு மற்றும் திறன்களை பொருந்தோட்ட கல்வியின் பல்வேறு அம்சங்களில் வழங்குவதாகும். இந்த கற்கைநெறியானது பங்குபற்றுபவர்களின் எதிர்கால தொழில் விருத்தி, மதிப்பீடு மற்றும் அவர்களது ஆற்றலை அதிகரிப்பதற்குமாக இந்த கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.



நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் பாடநெறிகள் பின்வருமாறு.

- தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை நடைமுறைகள்
- இறப்பர் உற்பத்தி மற்றும் தொழிற்சாலை நடைமுறைகள்
- மொழி தேர்ச்சி பரீட்சை

**(இ) ஆற்றல் விருத்தி பாடநெறிகள்**

இந்த பிரிவின் கிழ் உள்ள பாடநெறிகள் குறிப்பபிட்ட வேலைகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ள திறன் மற்றும் செயல் வல்லமையை மேம்படுத்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பங்குபற்றுபவர்கள் நவீன தொழில்நுட்பம் மற்றும் வேலை விபரத்துடன் தொடர்புடைய மேம்பாட்டு முறைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டுமென எதிர்பார்கப்படுகின்றது. இந்த வகையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் தனியார் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் பணி விபரங்களில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதற்காக, பணியாளர்கள் மேம்பாட்டுத்திட்டங்களை நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் விருத்தி பாடநெறிகள் பின்வருமாறு.



- செயலமர்வு, கருத்தரங்கு மற்றும் மாநாடு
- தொழில்நுட்ப அபிவிருத்தி பாடநெறிகள்
- திறன் விருத்தி பாடநெறிகள்
- தொழிலாளர் அபிவிருத்தி பாடநெறிகள்
- முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகள்
- பணியாளர் அபிவிருத்தி பாடநெறிகள்
- செயலமர்வு மற்றும் விசேட பாடநெறிகள்
- சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான பாடநெறிகள்

(ஈ) பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெளியீடுகளை வழங்குதல் (பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் சஞ்சிகை, செய்தி மடல், பயிற்சிதிட்டங்களின் மாணவா் கையேடுகள், பாட நூல் மற்றும் ஏனைய பருவகால வெளியீடுகள்.)

(உ) பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவை வழங்கப்படுவதுடன், பொது / தனியார் துறை நிறுவனங்களுக்கான ஊழியர்களை தெரிவுசெய்தல் மற்றும் பதவி உயர்தலுக்கான நுண்ணறிவு சோதனைகள் மற்றும் பரீட்சைகள் (வாய்மொழி, எழுத்து) நடத்துதல்.

(ஊ) தகுதியான பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களை நிறுவனத்தின் தொழில்சார் உறுப்பினர் களாக உறுதிப்படுத்துதல். (கௌரவ உறுப்பினர், சக உறுப்பினர், இணை உறுப்பினர், மாணவ உறுப்பினர்) வழங்குதல்.

(எ) வெளி நிறுவனங்களுக்கு அவர்களுடைய பாடநெறிகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு நிறுவனத்தின் வசதிகளை (உணவு, தங்குமிட மற்றும் விரிவுரை மண்டபம்) வழங்குதல்.

**சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள்**

என்ஜபிஎம் ஆண்டுதோறும் தொழில்துறை ஆய்வினை நடாத்தி தொழில்துறையின் தற்போதைய தேவைகளை அடையாளம் காட்டுகிறது. தற்போதைய தேவைகளின் அடிப்படையில், நிறுவனம் 2021 கல்வியாண்டில் பின்வரும் பயிற்சி திட்டங்களை உருவாக்கி நடத்தியது.

**(அ) தேநீர் சுவைபார்க்கும் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி**

இலங்கையிலும் மற்ற தேயிலை உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளிலும் தொழில்சார் தேயிலை சுவைப்பவர்களுக்கு பெரும் கேள்வியுள்ளது. எனவே, தேயிலை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுடன் இணைந்த பணியாளர்கள் மற்றும் தேயிலை சுவைப்பார்கும் துறையில் ஆர்வமுள்ள பாடசாலை கல்வியை முடித்தவர்களுக்காக, தேயிலை சுவைப்பதில் பரந்த அளவிலான அறிவையும் திறமையையும் வழங்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது.இத்திட்டத்திற்கு தொழில்துறையினரிடமிருந்தும், பாடசாலை இடைவிலகியவர்களிடமிருந்தும் அதிகமான கேள்வி இருந்தது, இத்திட்டத்தின் மூலம் தொழில்சார் தேயிலை சுவைப்பாளர்களை உருவாக்குவதன் மூலம் தேயிலை சுவைப்பவர்களுக்கான தொழிலிலுள்ள வெற்றிடத்தை பூர்த்தி செய்ய முடியும்.

**(ஆ) இயற்கை விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறி**

அண்மைக்காலமாக, வளர்ந்த நாடுகளில் இயற்கை முறையில் விளையும் விவசாயப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்து வருகிறது. பெருந்தோட்டம் மற்றும் விவசாயத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்து கல்வி கற்பிப்பதன் அவசியத்தை உணர்ந்து, மேற்படி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கனிம விவசாய நடைமுறைகள் உற்பத்தி மற்றும் கனிமப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்களைப் பற்றிய கோட்பாடு மற்றும் நடைமுறை சார்ந்த புரிதலை வழங்குவதே இந்தப் பாடத்தின் முக்கிய நோக்கமாகும்.

**அரசாங்கக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கான திட்டங்கள்.**

“சௌபாக்யா தக்மா” அறிக்கைக்கு அமைவா தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் அற்ற உணவு பொருட்களை உட்கொள்வதன் மூலம் உற்பத்தித்திறன் மிக்க ஆரோக்கியமான குடிமக்களைக்கொண்ட சமூகத்தை உருவாக்க, நாட்டில் விவசாயத்தை இயற்கை விவசாயமாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

இயற்கை விசாயம் என்பது மண், சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் ஆரோக்கியத்தை நிலைநிறுத்தும் ஒரு உற்பத்தி முறையாகும்.

எனவே அரசாங்கக் கொள்கைக்கு இணங்க, நிறுவனம் 2021 இல் பின்வரும் கருத்தரங்குகள் வெப்பினார்களை நடத்தியது.

- வெப்பினார்: ஒர்கானிக் ஶ்ரீலங்கா - : தோட்டத் துறையில் சவால்கள் மற்றும் வாய்ப்புகள்
- வெப்பினார்: பொருளாதார நிரந்தரம் மற்றும் அனைவருக்கும் செழிப்புக்கான மீழ் உற்பத்தி இயற்கை விவசாயம்
- வெப்பினார்: இயற்கை விவசாய மற்றும் நடுகை செய்பவர்
- வெப்பினார்: பேண்தகு தோட்டச்செய்கை கலாச்சாரத்தை நோக்கிய அரச அலுவலர்களின் பங்கு
- வெப்பினார்: இலங்கையின் பொருளாதார நம்பகத்தன்மையை மேம்படுத்த பெருந்தோட்டத்துறை பங்களிப்பு : வாய்ப்புகள் மற்றும் சவால்கள்

 

இந்தத் திட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச தொழில்துறை சார்ந்தவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிறந்த அனுபவமும் அறிவும் கொண்ட தொழில்முற்சியாளர்களால் வழங்கப்பட்டது.

**பயிற்சிநெறிகளின் முன்னேற்ற மீளாய்வு**

நிறுவனம் அடிப்படையாக இரண்டு பிரிவுகளுக்காக பாடநெறிகளை நடத்துகின்றது, அதாவது பெருந்தோட்ட கூட்டாணமை துறைக்கான **வருமான உழைப்பு திட்டங்கள்** மற்றும் விசேடமாக சிறு தோட்ட உரிமையாளர்கள் துறை **இயலளவை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள்** அரச நிதியை பயன்படுத்தி இலவசமாக நடத்தப் படுகின்றது.

நாட்டின் சவால் மிகு சுற்றுச்சூழல் நிலைமையை எதிர்கொள்ள NIPM நிகழ்நிலை கல்வி முறைக்கு மாற்றப்பட்டது. பெருந்தோட்டத்துறை தொடர்பான புதிய இணையப் வழி செயலமர்வுகளை அறிமுகப்படுத்தியதுடன் மேற்கூறிய தொழில்நுட்பத்தினுடாக நடைபெறும் வேலைதிட்டங்களை நிறைவுசெய்ய முடியும்.

**வருமானம் ஈட்டும் பாடநெறிகள்**

நிறுவனம் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்திற்கு வருமானத்தினை ஈட்டுவதற்காக கல்வி மற்றும் தொழில்சார் பாடநெறிகளை ஆரம்பித்தது.

| இல | நிழ்ச்சித்திட்ட வகை | காலப்பகுதி | நிழ்ச்சித்திட டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிே யார் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | |
| 01 | பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா | 18 மாதங்கள் | 1 | 21 |
| 02 | பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. (NVQ 06) | 12 மாதங்கள் | 1 | 21 |
| 03 | பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா. (NVQ 05) | 24 மாதங்கள் | 1 | 40 |
| 04 | பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. (NVQ 05) | 12 மாதங்கள் | 1 | 21 |
| 05 | பெருந்தோட்ட முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப டிப்பிளோமா. | 18 மாதங்கள் | 1 | 15 |
| 06 | தேயிலை பரிசோதனை உயர் சான்றிதழ் பாடநெறி | 06 மாதங்கள் | 1 | 21 |
| 07 | இயற்கை விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ உயர் சான்றிதழ் பாடநெறி | 24 நாட்கள் | 1 | 24 |
| 08 | கணக்கு வைத்தல் மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி | 12 மாதங்கள் | 1 | 26 |
| **தொழில்வாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை நடைமுறைகள் தொடர்பான தொழில்வாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் | 09 நாட்கள் | 1 | 26 |
| 10 | மொழித் திறன் பரீட்சை | 04 நாட்கள் | 1 | 12 |
| **தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | |
| 11 | தேயிலை சுவை பார்த்தல் மற்றும் தரப்படுத்தல் | 03 நாட்கள் | 1 | 8 |
| **முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (கோரிக்கை அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள்)** | | | | |
| 12 | துருசவிய நிதிய அலுவலர்களுக்கான மனப்பாங்கு மற்றும் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 01 நாள் | 1 | 7 |
| 13 | பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சு அலுவலர்களுக்கான மனப்பாங்கு மற்றும் அலுவலக நடைமுறை | 01 நாள் | 1 | 61 |
| 14 | பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சு அலுவலர்களுக்கான கடிதம் எழுதுதல் நிகழ்ச்சித்திட்டம் | 01 நாள் | 1 | 53 |
| 15 | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்கள் மற்றும் பெறுகை குழுக்களில் குறைபாடுகளை தடுத்தல் மற்றும் தாமதங்களை குறைப்பது எவ்வாறு | 01 நாள் | 1 | 78 |
| 16 | தாபன விதிக்கோவை தொடர்பான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பட்டறை | 01 நாள் | 1 | 63 |
| 17 | நிதிப் பிரமாணம் | 01 நாள் | 1 | 50 |
| 18 | அரச அலுவலர்களுக்கான MS Word | 01 நாள் | 1 | 36 |
| 19 | அரச அலுவலர்களுக்கான MS Excel | 01 நாள் | 1 | 29 |
| **திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | |
| 20 | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் உயர்தர எக்சல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான திறன் விருத்தி | 01 நாள் | 1 | 120 |
| **13 ஆண்டு கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் – NVQ 04** | | | | |
| 21 | தேயிலை தொழிற்சாலை உதவியாளர் (13 ஆண்டு கல்வி) - NVQ 04 | 06 மாதங்கள் | 1 | 23 |
| 22 | தேயிலை தோட்ட உதவியாளர் (13 ஆண்டு கல்வி) - NVQ 04 | 06 மாதங்கள் | 1 | 53 |
| **வெபினார்** | | | | |
| **23** | பெருந்தோட்ட தொழிற்துறையில் வலுசக்தி சேமிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான AI பிரயோக வெபினார் | 01 நாள் | 1 | 58 |
| **24** | இயற்கை ஸ்ரீலங்கா : பெருந்தோட்டத் துறையில் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான வெபினார் | 01 நாள் | 1 | 907 |
| **25** | பொருளாதார நிச்சயத்தன்மை மற்றும் அனைவருக்கும் சுபீட்சத்துக்கான மீள் உற்பத்தி வெபினார் | 01 நாள் | 1 | 411 |
| **26** | இயற்கை விவசாயம் மற்றும் நடுகையாளர்கள் : வெபினார் | 01 நாள் | 1 | 218 |
| **27** | பேண்தகு பெருந்தோட்ட கலாச்சாரத்தை நோக்கிய அரச அலுவலர்களின் வகிபாகம் : வெபினார் | 01 நாள் | 1 | 151 |
| **28** | வெபினார் : பெருந்தோட்த்துறையில் COVID 19 முன்னாயத்தம் மற்றும் பதில் வினையாற்றல் | 01 நாள் | 1 | 151 |
| **29** | வெபினார் : இலங்கை பொருளாதார நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக பெருந்தோடத்துறையின் பங்களிப்பு : வாய்ப்புகள் மற்றும் சவால்கள் | 01 நாள் | 1 | 117 |
| **ஆளணி அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள்** | | | | |
| **30** | அரச பெறுகை நடைமுறைகள் (நிகழ்நிலை) | 01 நாள் | 1 | 19 |
| **31** | பெறுகை – ஆலோசகரை தெரிவு செய்தல் | 01 நாள் | 1 | 20 |
| **32** | அலுவலக நடைமுறைகளின் செயற்திறனை மேம்படுத்துதல் | 01 நாள் | 1 | 9 |
| **33** | அலுவலக நடைமுறைகளின் பிரயோகம் | 01 நாள் | 1 | 12 |
| **34** | அலுவலக கோவை முகாமைத்துவம் | 01 நாள் | 1 | 15 |
| **35** | அலுவலக கடிதங்களை தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள் | 01 நாள் | 1 | 15 |
| **36** | அலுவலக தேவைகளுக்காக மின்னஞ்சல் பாவனையின் போது பின்பற்ற வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் மற்றும் நெறிமுறைகள் | 01 நாள் | 1 | 14 |

| | | | | |
|---|---|---|---|---|
| 37 | அலுவலக தேவைகளுக்காக பதிவுத் தபால் முகாமைத்துவத்தின் போது பின்பற்ற வேண்டிய அடிப்படை விதிகள் | 01 நாள் | 1 | 14 |
| 38 | வினைத்திறனான நேர முகாமைத்துவம் | 01 நாள் | 1 | 10 |
| 39 | முரண்பாட்டு முகாமைத்துவ நுட்பங்கள் | 01 நாள் | 1 | 10 |
| 40 | கூட்ட முகாமைத்துவ நுட்பங்கள் | 01 நாள் | 1 | 14 |
| 41 | தொழில் முன்னேற்றத்துக்கு தேவையான தலைமைத்துவ பண்புகள் | 01 நாள் | 1 | 14 |
| 42 | கணக்காய்வு ஐயவினாக்கள் | 01 நாள் | 1 | 20 |
| 43 | ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை | 01 நாள் | 1 | 7 |
| **பயிற்சிப் பட்டறை** | | | | |
| 44 | தோட்டப் பயிர் பல்வகைப்படுத்தல் மூலம் இலாபத்தை அதிகரித்தல் | 01 நாள் | 1 | 15 |
| 45 | பெருந்தோட்ட தொழிற்துறையில் மண் பாதுகாப்பு முறைகளை பிரயோகித்தல் | 01 நாள் | 1 | 12 |
| 46 | பெருந்தோட்ட தொழிற்துறையில் வர்த்தக காடாக்கல் மற்றும் மர முகாமைத்துவம் (நிகழ்நிலை) | 01 நாள் | 1 | 24 |
| 47 | பெருந்தோட்ட தொழிற்துறையில் பொருளாதார சுற்றறிக்கை மற்றும் அதன் பயன்பாடு | 01 நாள் | 1 | 12 |
| 48 | ஆக்கபூரவமான வேலைத்தள முகாமைத்துவம் (நிகழ்நிலை) | 01 நாள் | 1 | 12 |
| 49 | பெருந்தோட்ட தொழிற்துறையில் GIS பிரயோகம் | 01 நாள் | 1 | 24 |
| 50 | பெருந்தோட்ட தொழிற்துறையில் வலுசக்தி முகாமைத்துவம் மற்றும் சேமிப்பு தொடர்பான நிகழ்நிலை விழிப்புணர்வு | 01 நாள் | 1 | 17 |
| **விஷேட நிழ்ச்சித்திட்டங்கள்** | | | | |
| 51 | மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை நிழ்ச்சித்திட்டம் | 01 நாள் | 1 | 32 |
| 52 | காணிச் சட்டங்கள் மற்றும் அத்துமீறல் விடயங்களை கையாளுதல் (நிகழ்நிலை) | 01 நாள் | 1 | 30 |
| 53 | CDA ஆளணியிருக்கான தமிழ் மொழிப் பயிற்சி | | 1 | 127 |
| 54 | மத்துரட்ட பெருந்தோட்டத்துக்கான அடிப்படை எக்சல் பாடநெறி | 01 நாள் | 1 | 34 |
| 55 | தேயிலை தொழிற்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் காலநிலை மாற்ற தாக்கம் தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல் | | 1 | 25 |
| 56 | அலுவலக தேவைகளுக்காக மின்னஞ்சல் பாவனையின் போது பின்பற்ற வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுகள் மற்றும் நெறிமுறைகள் | 01 நாள் | 1 | 50 |
| | **மொத்தம்** | | **56** | **3428** |

அட்டவணை இல.03

மேற்கூறப்பட்டதற்கு மேலதிகமாக பரீட்சைகள் மற்றும் கல்விசார் காலத்தில் நிறைவு செய்வதற்கு முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் கல்விசார் திட்டங்கள் நிறுவனத்தினால் தொடரப்பட்டது.

| இல | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | ஒவ்வொரு பயிற்சிக்குமான காலம் | நடாத்ததிய பயிற்சிகளின் எண்ணிக்னை | பங்கேற்றோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 01 | பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா | 18 மாதங்கள் | 2 | 25 |
| 02 | பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்பிளோமா. ( NVQ பாடநெறிகள் மட்டம் 06) | 12 மாதங்கள் | 1 | 16 |
| 03 | பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. (NVQ பாடநெறிகள் மட்டம் 05) | 12 மாதங்கள் | 1 | 23 |
| 04 | பெருந்தோட்ட கணக்கீடு, நிதி மற்றும் கிரய முகாமைத்துவ உயர் சான்றிதழ் பாடநெறி. | 15 மாதங்கள் | 1 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | கணக்கு பதிவு மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி. | 12 மாதங்கள் | 1 | 27 |
| 06 | பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா (NVQ 05) | 18 மாதங்கள் | 1 | 25 |
| **மொத்தம்** | | | **07** | **126** |

அட்டவணை இல. 04

**வருமானம் ஈட்டும் பயிற்சிகளின் முன்னேற்றம் - 2021**

56 பயிற்சிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தன. 41 வருமானம் ஈட்டும் பயிற்சிகளை நிறுவனம் நிறைவு செய்தது. எனவே நடத்தப்பட்ட பயிற்சிகளின் முன்னேற்றம் 2021 ஆண்டில் 137 % ஆகும். நிறுவனம் எதிர்பார்த்த பயிற்சி வருமானத்தில் 53 % நிதி முன்னேற்றத்தை அடைந்தது. அது 49.549 மில்லியன் ரூபா ஆகும். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 719 பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை 3428 ஆகும். அது 476 % முன்னேற்றமாக அமைந்தது. பெரும்பாலான பயிற்சிகள் நிகழ்நிலை கருத்தரங்கு முறையில் நடைபெற்றதனால் பயிற்சி வருமானம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை. இந்த நிறுவனம் நிகழ்நிலை முறையில் பெருந்தோட்டத் துறையில் இயற்கை விவசாயம், காலநிலை மாற்றம் மற்றும் கொவிட் 19 நோய்பரவல் தொடர்பான 7 வெபினார்களை இலவசமாக நடத்தியது. 2020 ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக பயிற்சிகளை நடத்துவதில் ஏற்பட்ட பாதகமான தாக்கம் போன்று 2021 ஆண்டிலும் ஏற்பட்டது.

**2021 ஆம் ஆண்டுக்கான பயிற்சிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| பயிற்சியின் பெயர் | பாதீடு செய்யப்பட்டது | | | உண்மையானது | | | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பயிற்சிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | வருமானம் மில்லியன் ரூபா | பயிற்சிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | வருமானம் மில்லியன் ரூபா | பயிற்சிகள் | மாணவர்கள் | வருமானம் |
| கல்விசார் பயிற்சிகள் | 15 | 294 | 29.43 | 10 | 227 | 12.99 | 67% | 77% | 44% |
| திறன் அபிவிருத்தி பயிற்சிகள் | 5 | 75 | 1.47 | 1 | 120 | 0.21 | 20% | 160% | 14% |
| தொழில்நுட்ப அபிவிருத்தி | 1 | 20 | 0.49 | 1 | 8 | 0.26 | 100% | 40% | 53% |
| விசேட செயலமர்வு மற்றும் பயிற்சிகள் | 13 | 165 | 0.94 | 35 | 2620 | 3.43 | 262% | 1588% | 365% |
| முகாமைத்துவம், அபிவிருத்தி பயிற்சிகள் | 3 | 35 | 0.44 | 8 | 377 | 0.30 | 267% | 1077% | 68% |
| 13 ஆண்டு கல்வி திட்டம் | 2 | 100 | 16.75 | 2 | 76 | 9.12 | 100% | 76% | 54% |
| தொழிலாளர் அபிவிருத்தி | 1 | 20 | 0.03 | கொவிட் 19 காரணமாக நடத்தப்படவில்லை | | | | | |
| வெளிநாட்டு பயிற்சிகள் | 1 | 10 | - | கொவிட் 19 காரணமாக நடத்தப்படவில்லை | | | | | |
| மொத்தம் | 41 | 719 | 49.55 | 56 | 3428 | 26.32 | 137% | 476% | 53% |
| | | | | | | | | | |
| வெளியக பரீட்சைகள் | 25 | | 2.50 | 29 | - | 2.64 | 116% | - | 106% |
| **மொத்த கல்விசார் வருமானம்** | **66** | **719** | **52.05** | **85** | **3428** | **28.96** | **129%** | **476%** | **56%** |

அட்டவணை இல . 05




வரைபடம் 01




வரைபடம் 02

**வருமானம் ஈட்டும் பயிற்சிகளின் இலாப மற்றும் நட்ட பகுப்பாய்வு**

நிறுவனம் வருமானம் ஈட்டுவதற்காக பெயரளவிலான உயர் கற்கைநெறி கட்டணத்தை அறவீடு செய்வதனுடாக பல்வேறு வகையான கல்விசார், தொழில்சார் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சிகளை நடத்துகிறது. 2021 ஆம் ஆண்டு காலத்தில், நிறுவனம் ரூபா 16.93 மில்லியன் மொத்த பயிற்சி வருமானத்தல் சராசரி இலாப எல்லை 58 வீதத்துடன் பயிற்சி வருமானத்திலிருந்து 28.96 மில்லியன் தேறிய வருமானமாக பதிவாகியிருந்தது. பெரும்பாலான பயிற்சிகள் நிகழ்நிலை முறையில் நடத்தப்பட்டமை காரணமாக பொருளாதார மற்றும் சுகாதார நெருகடகடி வேளையில் கூட பயிற்சிகள் ஊடான இலாபம் அதிகரித்துள்ளது.

கற்கைநெறியின் ஒவ்வொரு வகைக்கான இலாப மற்றும் நட்ட பகுப்பாய்வு பின்வரும் அட்டவணை இல 06 இல் தரப்பட்டுள்ளது.

| பயிற்சின் பெயர் | வருமானம் (ரூபா.மில்) | கிரயம் (ரூபா.மில்) | இலாபம்/ நட்டம் (ரூபா.மில்) | இலாப வீதம் |
|---|---|---|---|---|
| கடந்த வருட அணிகள் உள்ளடங்கலாக கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்சிநெறி | 12.99 | 6.01 | 6.98 | 54% |
| முகாமைத்துவ அபிவிருத்தி | 0.30 | 0.21 | 0.09 | 30% |
| தொழில்நுட்ப அபிவிருத்தி | 0.26 | 0.14 | 0.12 | 46% |
| திறன் அபிவிருத்தி | 0.21 | 0.05 | 0.16 | 76% |
| செயலமர்வு மற்றும் விசேட பயிற்சிநெறி | 3.43 | 0.53 | 2.90 | 85% |
| 13 வருட கல்வி உத்தரவாத திட்டங்கள் | 9.12 | 4.29 | 4.83 | 53% |
| **நிகழ்ச்சிகளின் மொத்த வருமானம், கிரயம் மற்றும் இலாபம்** | **26.32** | **11.23** | **15.09** | **57%** |
| வெளிவாரி பரீட்சை வருமானம் | 2.64 | 0.80 | 1.84 | 70% |
| **மொத்த கல்விசார் வருமானம், கிரயம் மற்றும் இலாபம்** | **28.96** | **12.03** | **16.93** | **58%** |

அட்டவணை இல. *06*

**தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் அபிவருத்தி பயிற்சிகள் – 2021**

சிறு தோட்ட துறையின் முக்கியத்துவம், பெருந்தோட்ட துறைக்கு அவர்களின் பங்களிப்பு மற்றும் இந்த துறைக்கான மனித வள விருத்தியின் முக்கியத்துவம் என்பனவற்றை நிறுவனம் இனங்கண்டுள்ளது. இந்த தகவலை திறைசேரிக்கு வழங்குவதன் மூலம் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தியில் நிறுவன பாதீட்டில் இருந்து கணிசமான நிதியை ஒதுக்கும் சாத்தியமுள்ளது. 2021 ஆம் ஆண்டில் சிறு தோட்ட உரிமையாளர்களின் அறிவை முன்னேற்றுதல் மற்றும் அவர்களது வருமானத்ததை அதிகரிக்கும் நோக்கில் ரூபா 7.00 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடில் நிறுவனம் 200 பயிற்சிகள் திட்டமிடப்பட்டன. எவ்வாறயினும் கொவிட் 19 நோய் பாரவல் காரணமாக ரூபா 4.00 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடில் 100 பயிற்சி திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது

எவ்வாறயினும் பல்வேறு தடைகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும் 2021 ஆன்டில் சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக 114 பயிற்சிகளை நிறுவனம் நடத்தியது. அதற்கு ரூபா 2.66 மில்லியன் செலவு ஏற்ப்பட்டது. சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக பின்வரும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.



- மதுசார தடுப்பு
- மனப்பாங்கு அபிவிருத்தி
- முகாமைத்துவ அபிவிருத்தி
- முயற்சியானர் அபிவிருத்*தி*
- தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி

சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதன் விபரங்கள் பின்வரும் அட்டவணை இல.05 தரப்பட்டுள்ளது.

**சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதன் விபரங்கள்**

| பயிற்சி வகை | எதிர் பார்க்கப்பட்ட பயிற்சி | எதிர் பார்க்கப்பட்ட பங்கேற்பாளர்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் (ரூபா.மில்) | பயிற்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்றோர் எண்ணிக்கை | கிரயம் (ரூபா.மில்) |
|---|---|---|---|---|---|---|
| தேயிலை - சிறு தோட்ட உரிமையாளர்கள் | 25 | 1250 | 1.25 | 25 | 1126 | 0.51 |
| இறப்பர் - சிறு தோட்ட உரிமையாளர்கள் | 25 | 1250 | 1.25 | 27 | 689 | 0.54 |
| தென்னை - சிறு தோட்ட உரிமையாளர்கள் | 30 | 1500 | 1.50 | 50 | 1433 | 1.10 |
| ஏனைய பயிர்கள் | 20 | 1000 | 1.0 | 12 | 503 | 0.52 |
| மொத்தம் | **100** | **2500** | **4.00** | **114** | **3751** | **2.66** |
| முன்னேற்றம் | **-** | **-** | **-** | **114%** | **75%** | **71%** |

அட்டவணை இல 07

2021 ஆம் ஆண்டு நிறுவனம் 100 பயிற்சிநெறிகளை நடாத்த திட்டமிட்டிருந்தது அதில 114 பயிற்சிநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டன 114 % செயற்றப்பாட்டு முன்னேற்றம் மற்றும் 71 % நிதி முன்னேற்றமும் அடையப்பட்டமை காட்டப்படுகிறது.

**கடந்த வருடத்துடன் ஒப்பீடாக பயிற்சிகளின் முன்னேற்றம்**

2020 ஆண்டுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை, பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை மற்றும் வருமானம் முன்னேற்றம் ஆகியன கணிசமாக அதிகரித்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகரிப்பதற்கான பிரதான காரணம் நிகழ்நிலை முறையில் பயிற்சிகள் நடத்தப்பட்டமை ஆகும். நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 நோய்பரவல் நிலை நிறுவனத்தின் வெளிக்கள பயிற்சி மற்றும் செயல்பாட்டு பயிற்சி ஆகியவற்றை பெரிதும் பாதித்திருந்தது.



பயிற்சிகளின் எண்ணிக்கையில் 229 % அதிகரிப்பு வருமானம் ஈட்டிய பயிற்சிகளில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையில் 665 % அதிகமாகவும் பதிவாகியுள்ளது. பயிற்சிகளின் வருமானம் 22 % அதிகரித்துள்ளது. 2021 ஆண்டில் நிறுவனத்தின் முக்கிய வருமானம் கல்வி மற்றும் தொழில்வாண்மை பயிற்சிகளாகும். எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 நோய்ப்பரவல் நிரைமை காரணமாக குறிப்பிட்ட திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ஈட்டப்படவில்லை.

சிறுதொழில் துறை பயிற்சிகளின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்ப்பாளர்களின் எண்ணிக்கை முறையே 714 % மற்றும் 441 % ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பீடுகையில் சிறு உரிமையாளர்களின் திட்டங்களுக்கான நிதிப் பயன்பாடும் 412 % அதிகரித்துள்ளது. 2020 ஆண்டில் குறைவான அடைவ எட்டப்பட்டதனால் 2021 ஆண்டுக்கான பயிற்சிகள் தொடர்பான அனைத்து பெறுபேறுகளும் 2021 ஆண்டில் துரிதமாக அதிகரித்தது.

**2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடான 2021 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| | 2020 | 2021 | விகிதம் அதிகரிப்பு / (குறைவு) |
|---|---|---|---|
| பயிற்சிகளின் எண்ணிக்கை (வருமானம் ஈட்டிய பயிற்சிகள்) | 17 | 56 | 229% |
| பங்கேற்றோர் எண்ணிக்கை (வருமானம் ஈட்டிய பயிற்சிகள்) | 449 | 3428 | 663% |
| மொத்த பயிற்சி வருமானம் (ரூபா.மில்) | 23.73 | 28.95 | 22% |
| சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான நிகழ்ச்சி திட்டத்திளின் எண்ணிக்கை | 14 | 114 | 714% |
| பயிற்றுவிக்கப்பட்ட சிறு தோட்ட உரிமையாளர்கள் எண்ணிக்கை | 693 | 3751 | 441% |
| சிறு தோட்ட உரிமையாளர் பயிற்சியால் ஏற்பட்ட கிரயம் (ரூபா.மில்) | 0.52 | 2.66 | 412% |

அட்டவணை இல 08

**பாடசாலையிலிருந்து விலகியோருக்கான ஆற்றல் அபிவிருத்தி பயிற்சிகள் தொழில் தராதர (NVQ) மட்டம் 4**

பின்வரும் தேவையை பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள 13 ஆண்டு உத்தரவாத கல்வி திட்டத்தில் இணைக்கப்பட்ட மாணவர்களுடன் சேர்த்து NVQ 4 ஆம் மட்டம் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறுவனம் நடத்தியது.




- க.பொ.த சாதாரண தரத்தில் உயர் கல்விசார் செயல்திறன் அடையாத பிள்ளைகள் உள்ளடங்கலாக க.பொ.த சாதாரண தரத்திற்கு பின்னரான தொழிற்கற்கை பிரிவில் அனைத்து பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.
- க.பொ.த சாதாரண தரத்திற்கு பின்னர் அனைத்து பிள்ளைகளின் தேவைக்காக நெகிழ்வுத் தன்மையான கற்றல் சந்தர்ப்பம் வழங்குதல்.
- கற்றல் செயல்முறையின் உயர்வில் பங்குபற்றுதல் மற்றும் பங்கேற்றுவோர் வேலை உலகில் இணைவதற்கு வழியமைத்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மிக தேவைப்படும் வேலை வாய்புககளுக்கான தொழில் பாடங்களை அறிமுகப்படுத்தல்.

NIPM பெருந்தோட்ட துறையின் தேவையை பூர்த்தி செய்வதற்கு NVQ கட்டமைப்பின் அடிப்படையை பின்பற்றி இரண்டு NVQ 4 ஆம் மட்ட கற்கைநெறிகளை நடத்தியது. அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**உதவி தொழிற்சாலை அலுவலர் - NVQ மட்டம் 4**

- தேயிலை உற்பத்தி தொழில்நுட்ப்ப மற்றும் முகாமைத்துவ அம்சங்கள் குறித்த பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதல்.
- தொழிற்சாலை மற்றும் அலுவலக செயற்ப்பாடுகள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்தலை விருத்தி செய்வதற்கு அதிகளவு தொழில்நுட்ப ரீதியாக அன்றி வினைத்திறன் மற்றும் விளைதிறனை முன்னேற்றுதல் மற்றும் தொழிற்சாலை மட்டத்தில் தீர்மானம் எடுத்தல் மற்றும் செயற்திறன் கண்காணிபப்பிற்காக இத் தகவல் பயன்படுத்தப்படுகின்றது.
- தேயிலை தொழிற்சாலை அலுவலர் பயிலுனர்களாக மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகளை இனங்கண்டு தேர்ந்தெடுப்பதில் தனியார் தேயிலை தெழிற்சாலைகள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உதவுதல்.

**உதவி வெளிக்கள அலுவலர் - NVQ மட்டம் 4**

- தோட்ட முகாமைத்துவம் மற்றும் விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல். NVQ 4 ஆம் மட்டத்துடன் திறன்மிக்க வெளிக்கள அலுவலர்களை உருவாக்க பெருந்தோட்ட விவசாயம் தொடர்பான தர்க்கரிதியான, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ அம்சங்களில் பயிற்சியளித்தல்.
- கள அலுவலர்களாக மிகவும் பொருத்தமான இளம் விண்னப்பதாரிகளை இனங்கண்டு தேர்ந்தெடுப்பதில் தோட்ட மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உதவுவதல்.

தேயிலை தோட்ட வெளிக்கள அலுவலர்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்கள் வேலை வாய்ப்புகளை பெறும் இயலுமை உள்ளது.

இந்த ஆண்டில் கொவிட் - 19 தொற்று நோய் நிலவிய போதிலும், பாடத்திட்டத்துக்கு அமைய அனைத்து மாணவர்களுக்கும் நிகழ்நிலை முறையில் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கான வேலைத்தள பயிற்சி வழங்கப்பட்டது.

**ஏனைய நிறுவனங்களுக்காக பரீட்சைகளை நடத்தல்**

பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெவ்வேறு பாடங்களில் உசாத்துணை சேவை வழங்குதல் தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். 1987 ஆம் ஆண்டில் இருந்து பெருந்தோட்ட துறையில் சிறப்பு தேர்ச்சியடைந்துள்ள வேறுபட்ட அரச / தனியார் துறை நிறுவனங்கள் தமது ஊழியர்களை பதவி உயர்த்தல் மற்றும் புதிய ஊழியர்களை இணைத்து கொள்ளவதற்கான பரீட்சை நடத்துதல் போன்ற சேவைகள் நிறுவனத்தால் வழங்கப்படுகிறன்றன.

கடந்த ஆண்டு அனுபவங்களுக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் 29 பரீட்சைகளை நிறுவனம் நடத்தியது. அதன் மூலம் ரூபா 2.64 மில்லியன் வருமானத்தை உழைத்தது. இவ்வாறான பரீட்சைகளின் விபரம் பின்வரும் அட்டவணை இல. 09 காட்டப்படுகிறது.

## 2021 இல் நடத்திய பரீட்சைகள்

| நிறுவனம் | பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | ஈட்டிய வருமானம் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| துருசவிய நிதிய MM1-1 கணக்காளர் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 1 | 0.07 |
| துருசவிய நிதிய JM1-1 மேம்படுத்தல் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 1 | |
| துருசவிய நிதிய MA 1-2 முகாமைத்துவ உதவியாளர் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 2 | |
| இலங்கை மரமுந்திரிகை MA 1-1 முகாமைத்துவ உதவியாளர் 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 20 | 0.18 |
| இலங்கை மரமுந்திரிகை MA 1-1 முகாமைத்துவ உதவியாளர் 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 12 | |
| இலங்கை மரமுந்திரிகை MA 1-1 முகாமைத்துவ உதவியாளர் 3 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 4 | |
| இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தொழில்நுட்ப ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 122 | 0.34 |
| கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் MA 1-1 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 1 | 0.10 |
| கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் MA 1-1 3 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 4 | |
| கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் MA 3 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 2 | |
| கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் MA 1-1 1 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 6 | |
| இலங்கை தேயிலை சபைக்கான முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 8 | 0.03 |
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான கணக்கு வைப்பாளர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 80 | 0.14 |
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான பரிசோதகர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 30 | 0.10 |
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான உள்ளக கணக்காய்வாளர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 45 | 0.13 |

| | | | |
|---|---|---|---|
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான போக்குவரத்து அலுவலர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 10 | 0.03 |
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான TA-M ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 4 | 0.06 |
| தென்னை அபிவிருத்தி அதிகாரசபைக்கான RO ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 133 | 0.12 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்துக்கான TO (MA 2-2) ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 9 | 0.07 |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MM 1-1 வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 3 | |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MM 1-1 வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 2 | |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MA 1-1 (N-Tec) வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 2 | |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MA 1-1 (N-Tec) வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 19 | |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MM 1-1 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 13 | |
| பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் (WP) MM 1-1 3 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | 1 | 1 | 0.23 |
| இலங்கை தேயிலை சபைக்கான MA 1-1 ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 93 | 0.29 |
| இலங்கை தேயிலை சபைக்கான தேயிலை பரிசோதகர் ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 80 | 0.20 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்துக்கான R&D ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 33 | 0.13 |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்துக்கான RDO ஆட்சேர்ப்பு பரீட்சை | 1 | 203 | 0.27 |
| **மொத்தம்** | **29** | 943 | **2.49** |

அட்டவணை இல . 09

## பெருந்தோட்ட முகாமைத்துவ விஞ்ஞானமாணி (BSc.) பட்டம்.

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்ட முகாமைத்துவ பீடத்துடன் இணைந்து தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.



இது தொலைக்கல்வி கற்றல் முறையில் நடத்தப்படும் 3ஆண்டு பட்டப்படிப்பு ஆகும். உள்வாங்கல் வரையறைகளின்படி, பட்டப்படிப்பு திட்டத்தில் இணையும் அனைத்து மாணவர்களும் தங்கள் சிறப்புத் துறையில் குறைந்தபட்சம் 3 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தற்போது பணியில் இருக்க வேண்டும்.

இந்த பட்ட படிப்புக்கான இலக்கு குழுக்களுக்களாக பின்வரும் அலுவலக ஊளியர்கள் காணப்படுகிறார்கள் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனங்கள் தேயிலை சிறு தோட்ட உரிமையாளர்கள் அபிவிருத்தி அதிகார சபை இறபர் ஆபிவிருத்தி துறை தேயிலை சபை தெங்கு பயிர் சபை பயிர் ஆராச்சி நிறுவகம் (TRI, RRI, CRI, SRI) விவசாய ஏற்றுமதி துறை , விவசாய துறை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார துறை, இலங்கை பெருந்தோட்ட கூட்டுதாபனம் மகாவலி அதிகார சபை வங்கிகள் மற்றும் நாட்டின் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள்.

## நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவம்

1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறை மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவத்தை வழங்குவதலை தொடர்ந்தது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பத்து (10) கௌரவ உறுப்பினர், ஒன்பது (09) சக உறுப்பினர் மற்றும் ஐந்து (05) நிர்வாகிகளுக்கான இணை உறுப்பினர். அங்கத்துவம் வழங்கப்பட்டது.



ஆண்டின் இறுதியில், ஒவ்வொரு பிரிவிலும் இருந்த மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை கிழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| **கௌரவ அங்கத்துவம்** | **31** |
|---|---|
| **நட்பு அங்கத்துவம்** | 236 |
| **இணை அங்கத்துவம்** | 34 |
| **மாணவ அங்கத்துவம்** | 01 |
| **மொத்தம்** | 302 |

அட்டவணை இல 10

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் நிலையான பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகள்: முன்னோக்கிச் செல்லும் வழியை மறுசீரமைத்தல் மற்றும் உறுப்பினர்களிடையே தகவல்களை பகிர்ந்து கொள்ளவதை நோக்கமாக கொண்ட ஒரு விழிப்புனர்வு செயலமர்வினை ஏற்பாடுசெய்து நடத்துவதற்கு நிறுவனம் திட்டமிட்டிருந்தது. தொழில்சார் உறுப்பினர்களின் பங்கேற்புடன் பெப்ரவரி 2021 இல் ஹோட்டல் குயின்ஸ்பரியில் நடைபெற்றது.

## கிடைக்கத்தக்க வசதிகள்



- **நூலக வசதிகள்**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நூலகத்தில் 4200 மேற்ப்பட்ட தகவல் மூலாதாரங்கள் உள்ளன அவை புத்தகங்கள், இதழ்கழ் மற்றும் பருவ இதழ்கள், சுவரெட்டிகள் துண்டு பிரசுரங்கள், கட்டுரைகள், இறுவெட்டுக்கள், ( CDs, DVDs) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அந்த மூலாதாரங்கள் இரண்டுவகையாக உருவாக்கப்படுகின்றன. இரவல் வழங்கல் சேகரிப்பு மற்றும் உசாத்துணை சேகரிப்பு. மேலே உள்ள அனைத்து தகவல் ஆதாரங்களும் DDC அமைவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை, விவசாயம் போன்ற பெருந்தோட்ட கைத்தொழில்களுடன் தொடர்பான பெறுமதிமிக்க புத்தகங்களை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுனத்தின் நூலகம் கொண்டுள்ளது. மேலும் இது கணக்கீடு, பொது முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுதல், உயிரியல், வேதியல் கணிதம்,கணனி அறிவியல் ஆங்கிலமொழி பொது அறிவு மற்றும் பொழுது போக்கு தொடர்பான புத்தக தொகுப்பை கொண்டுள்ளது. மேலும் நூலகம் இரவல் வழங்கல் மற்றும் உசாத்துணை மற்றும் நீடிப்பு சேவை வழங்குகின்றது. இறுதியாக NIPM இன் நூலகத்தை தன்னியக்க நுலகமாக மாற்றுவதன் மூலம் ஆராச்சி நூலகமாக மற்றியமைப்பதற்கான மதிப்பீட்டின் முதல் படியாக வைத்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டிற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

## கற்றல் நிலையம்

அனைத்து தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளையும் நன்கு அறிந்துகொள்வதற்காக தற்போதுள்ள டிப்ளோமா திட்டம் மற்றும் வருங்கால பயிர்செய்கையாளர்களின் நடைமுறைதேவைகளை பூர்த்திசெய்வதற்கு இந்த நிறுவனம் ஒரு கற்றல் நிலையத்தை கொண்டுள்ளது. இந்த நிலையத்தில் நவீன தேயிலை உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் ஒரு சிறந்த தேநீர் சுவைபர்க்கும் அறை உள்ளது. இங்கு ஒரு தடவையில் 20 மாணவர்களை உள்வாங்கலாம்.





- **தங்குமிட வசதிகள்**

.

கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு தேவையான போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த நிறுவனம் கொண்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச கேள்விகளுக்கேற்ப சந்தை போக்கை பேணுவதற்காக மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தலுக்காக ஒவ்வொரு ஆண்டும் தேசிய பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அத்துருகிரிய நிலையம் மூன்று விரிவுரை மண்டபங்கள் மற்றும் குளிருட்டும் வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டப வசதிகளை கொண்டுள்ளது. மாநாட்டு மண்டபத்தில் ஒரேநேரத்தில் 200 பேர் அமரலாம். 60 பேருக்கு விடுதி வசதிகளை வழங்கலாம்.

அத்தருகிரிய விடுதி





## போகவந்தலாவ பிரந்திய நிலையம்




போகவந்தலாவ தெரேசியா தோட்டத்தில் அமைந்துள்ள NIPM இன் பிராந்திய நிலையமாகும். இது நவீன வசதிகளுடனான பயிற்சி நிலையமாக மாற்றப்படும் வரை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கிட்டத்தட்ட 100 பேருக்கான இயலளவை கொண்ட மாநாட்டு மண்டபம், ஒவ்வொன்றிலும் 50 பேர் அமரக்கூடிய இரண்டு விரிவுரை மண்டபங்கள் நிலையத்தில் உள்ளன

போகவந்தலாவ விடுதி ஒரே நேரத்தில் 70 பேருக்கு தங்குமிட வசதிகளை வழங்குகிறது. இது பெரிய உணவு மண்டபம், 3 அலுவலக அறைகள் மற்றும் 600 இக்கு மேற்பட்ட புத்தகங்களை கொண்ட சிறிய நூலகத்தையும் கொண்டுள்ளது. அங்கே விடுதி முகாமையாளர் பங்களாவும் உள்ளது. இந்த நிலையத்தில் விடுதி முகாமையாளர் மற்றும் சிற்றூழியரை தவிர வேறு எவரும் நிரந்தர தொழிலாளர்களாக இல்லை. எனவே பயிற்சிகளின் போது தேவையான தொழிலாளர்கள் பணிப்பாளரின் முன் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். அமைய அடிப்படையிலான மூன்று தொழிலாளர்களும் ஒரு பாதுகாவலரும் உள்ளனர்.

## தெனியாய பிரந்திய நிலையம்

தென் மாகாணத்திற்கான பயிற்சித்திட்டங்கள், வசதிகளை வழங்குவதற்காக 2018 இல் தியதாவியில் நிறுவப்பட்டது. ஒரே நேரத்தில் 40 மாணவர்களை உள்ளடக்ககூடியது.

## வசதிகளை வாடகைக்கு வழங்குதல்

விடுதி விரிவுரை மண்டபம் உணவு போண்ற வசதிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. கொவிட் தொற்று நோய்பரவல் காரணமாக பல நிறுவனங்கள் நிகழ்ச்சிகளை நடத்தாததால் 2021 ஆம் ஆண்டில் வெளி நிறுவனங்களுக்கான வசதிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் மிக குறைவடைந்துள்ளது்



# நிதி மீளாய்வு

## செயற்திறன்

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடும் போது 2021 ஆம் ஆண்டில் நிதிச் செயல்பாட்டின் சுருக்கத்தை. பின்வரும் அட்டவனை எண் 11, ஒப்பிட்டு காட்டுகின்றது.

| | 2021 (ரூபா மில்.) | 2020 (ரூபா மில்.) | வேறுபாடு (ரூபா மில்.) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **139.83** | **210.34** | **(70.51)** | **-34%** |
| | | | | |
| மீண்டெழும் மானியம் | 59.37 | 57.81 | 1.56 | 3% |
| மானிய மூலதனம் | 34.00 | 25.75 | 8.25 | 32% |
| விசேட அபிவிருத்தி திட்ட மானியம் | - | 80.82 | (80.82) | - |
| பயிற்சி செயற்பாட்டு மொத்த வருமானம் | 30.73 | 23.75 | 6.99 | 29% |
| ஏனைய வருமானம் | 15.74 | 22.21 | (6.47) | -29% |
| | | | | |
| **மொத்த செலவீனம்** | **120.63** | **113.52** | **7.11** | **6%** |
| சம்பளம், கூலி மற்றும் ஊழியர் நன்மைகள் | 45.23 | 45.14 | 0.09 | 0.2% |
| சிறு தோட்ட உரிமையாளர்கள்இயலளவை கட்டியெழுப்புவதுடன் தொடர்புடைய கல்விசார் பயிற்சி செலவீனம் | 16.32 | 11.35 | 4.97 | 44% |
| ஏணைய செலவீனம் | 59.08 | 57.03 | 2.05 | 4% |
| | | | | |
| **தேறிய மிகை** | **19.20** | **96.82** | **(77.61)** | **-80%** |

அட்டவணை இல 11

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், திறைசேரியிலிருந்து மீண்டெழும், மூலதனம் மற்றும் மானியங்களை பெறுவதில் நிறுவனம் கணிசமான முன்னேற்றத்தை காட்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் சிறப்பு அபிவிருத்தத் திட்டத்திற்கான திறைசேரி மானியம் முடிவடைந்து இருந்தது. எனவே 2021 ஆம் ஆண்டில் மேற்கூறிய திட்டத்திற்கான நிதி வருமானம் இல்லை. இதன் விளைவாக 2021 இல் 34% எதிர்மறையான முன்னேற்றம் பதிவாகியதுடன் பாரிய வருமான வீழ்ச்சி ஏற்பட்டது.

பயிற்சி தொடர்பான செயற்ப்பாடுகளினுடாக ரூபா 30.73 மில்லியன் ஈட்டப்பட்டது. கடந்த ஆண்டிற்கு மேலாக 29% முன்னேற்றமாக அறிக்கையிடப்படுகிறது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயிற்சி தொடர்பான செயற்ப்பாடுகளினால் ரூபா 6.99 மில்லியன் வருமானம் அதிகரித்துள்ளது. ஏனைய வருமானம் ரூபா. 10.75 மில்லியன் வட்டி வருமானத்தை உள்ளடக்கியது, இது குறைந்த வட்டி விகிதங்கள் காரணமாக கடந்த ஆண்டில் ரூ. 3.98 மில்லியனால் குறைவடைந்தது. கோவிட் -19 நோய் பரவல் காரணமாக வாடகை வருமானம் குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஏனைய மொத்த வருமானம் கடந்த ஆண்டை விட ரூ.6.47 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் நிதிச் செயல்திறனின் அறிக்கைக்கு அமைவாக, மொத்தச் செலவினம் ரூபா. 7.13 மில்லியன், இது கடந்த ஆண்டிற்கு மேலாக 6% அதிகரிப்பு பதிவாகிறது.

2021 ஆம் ஆண்டில் சம்பளம், ஊதியம் மற்றும் ஊழியர்களின் நன்மைகள் மிகக் குறைந்த அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன, இது கடந்த ஆண்டினை விட 0.2% ஆகும். இருப்பினும், பயிற்சி செலவு ரூபா.4.98 மில்லியன் அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2021 ஆம் ஆண்டில் பயிற்சி வருமானத்தை அதிகரிப்பதற்கும், 2021 ஆம் ஆண்டில் சிறு உடமையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அதிகரிப்பதற்கும் இணையாக கடந்த ஆண்டினை விட 44% நேர்மறையான முன்னேற்றம் பதிவாகியுள்ளது. 2020 ஆண்டுடன் ஒப்பிடும்போது சொத்துக்களின் தேய்மானம் உள்ளடங்கலாக ஏனைய செலவுகள் ரூபா. 2.05 மில்லியனால் அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் தேறிய மிகை ரூபா.19.20 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது, கடந்த 2020 ஆண்டுடன் ஒப்பிடும் போது 80% குறைந்துள்ளது. விசேட அபிவிருத்தி திட்டத்திற்கான நிதி 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது, இது 2021 ஆம் ஆண்டில் இத்தகைய உயர்ந்த விகித வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறுவனத்தின் சொந்த நிதியைப் பயன்படுத்தி இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்டதுடன் 2022 இல் திட்டத்தை பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட் 19 மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டில் நிறுவன முகாமைத்துவத்தினால் கணிசமான அளவிலான முன்னேற்றத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

## 2020 ஆண்டுடன் ஒப்பீடும் போது 2021 ஆம் ஆண்டின் நிதி நிலமை முன்னேறம்

கிழ் உள்ள அட்வணையில் இல 12 2020 ஆண்டுடன் ஒப்பீடும் போது 2021 ஆம் ஆண்டின் நிதி நிலமை முன்னேற மாற்றம் காட்டப்படுகின்றது.

| | 2021 | 2020 | வேறுபாடு | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| மொத்த சொத்து | | | 107.33 | 10.97% |
| நடைமுறைச் சொத்து | 1,085.47 | 978.14 | (41.24) | -15.16% |
| நடைமுறைப் பெறுப்பு | 230.77 | 272.01 | 4.67 | 16.62% |
| நடைமுறையல்லா சொத்து | 32.78 | 28.11 | 148.58 | 21.04% |
| தேறிய சொத்து | 854.70 | 706.12 | 104.85 | 11.15% |
| நடைமுறை விகிதம் | 1,045.53 | 940.68 | -1.89 | -19.54% |

அட்டவணை இல 12

2021 இல் மொத்த சொத்துக்களின் மதிப்பு ரூபா. 1085.47 மில்லியன் வரை அதிகரித்து 10.97% நேர்மறையான முன்னேற்றத்தைப் பதிவுசெய்ததுடன் நடைமுறைச் சொத்து ரூபா 272.01 மில்லியனில் இருந்து 230.77 மில்லியன வரை வீழ்ச்சியடைந்தது. 15.16% சரிவு சதவீதமாகும். நடைமுயையில்லுள்ள திட்டத்திற்குப் பயன்படுத்துவதற்காக வங்கியில் உள்ள குறுகிய கால வைப்புத்தொகைகளை உள்ளடக்கியதன் விளைவாக நடைமுறை சொத்தில் குறைவு ஏற்பட்டது. எவ்வாறாயினும் நடைமுயையில்லுள்ள திட்டத்தில் முதலீடு செய்ததன் காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்களின் மதிப்பு ரூபா.706.12 மில்லியனில் இருந்து ரூபா.854.70 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மீதான செலுத்த வேண்டியவை அதிகரித்ததன் காரணமாக நடைமுறை பொறுப்பு 16.62% அதிகரித்துள்ளது. எனவே இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதத்தால் 19.54% குறைந்ததை பிரதிபலிக்கிறது. இருப்பினும், நடைமுறை விகிதத்தை 7.04 மடங்கு நிலைநிறுத்துவதால் இது ஆரோக்கியமான மற்றும் சிறந்த நிதி நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

**தேறிய சொத்துக்கள்**

2021 ஆம் ஆண்டில் தேறிய சொத்துக்கள் ரூபா 1045.53 மில்லியன்களாக அதிகரித்துள்ளது 11.15% முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் முன்னேற்றத்திற்கு நடைமுறையிலுள்ள திட்டத்தின் முதலீடு மற்றும் மூலதனச் சொத்துக்களின் முன்னேற்றம் ஆகியவை சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நிறுவனம் ரூபா. 2021 ஆம் ஆண்டில் 19.20 மில்லியன். பின்வரும் வரைபடம் 2014 முதல் 2021 வரையிலான தேறிய சொத்தின் முன்னேற்ற வடிவத்தைக் குறிக்கிறது.




வரைபடம் இல 03

## திரவ நிலை

2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு நடைமுறை பொறுப்புக்குமாக 7.04 மடங்கு நடைமுறை விகிதம் இருந்தது இது நிருவனத்தினால் ஆரேக்கியமான நிதி ஸ்திரத்தன்மை பேணப்படுவதனை குறிக்கின்றது.

**<u>ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் முதலீடு</u>**

2021 ஆம் ஆண்டில், நிறுவனம் 2021 ஆம் ஆண்டில் ரூ. 35.15 மில்லியன் மதிப்புள்ள கட்புலனாகும் சொத்தையும், ரூபா 1.6 மில்லியன் மதிப்புள்ள கட்புலனாகா சொத்துக்களையும் வாங்கியது. எனவே ஆண்டு 2021 கட்புலனாகும் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா. 550.54 மில்லியன் என அறிவிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, நிறுவனம் எதிர்காலத்தில் பட்டம் வழங்கும் நிலையை நோக்கி தனது பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. 2017 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதிக்கான மொத்த அரச நிதியுதவி ரூபா 216.9 மில்லியனுடன் 2020 ஆம் ஆண்டில் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
மேற்கூறிய திட்டத்தின் மீதமான வேலை முன்னேற்றத்தின் மதிப்பு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 299 மில்லியனாக இருந்தது. நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டில் திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கப்பட்டது.

## எதிரான மூலதனச் செலவினங்களின் சுருக்கம்

2021 ஆம் ஆண்டிற்கு ரூபா 40.00 மில்லியன் ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் அரசாங்கம் எதிர்கொண்ட பல்வேறு தடைகள் காரணமாக திறைசேரி உண்மையான மானியமாக ரூபா 34.00 மில்லியன் வரையறுத்தது.

திறைசேரி மானியத்திலிருந்து செய்யப்பட்ட மொத்த மூலதனச் செலவு ரூபா 34.00 மில்லியன் ஆகும். எனவே 2021 ஆம் ஆண்டில் திறைசேரி மூலதன மானியத்தின் முன்னேற்றம் 100% ஆக இருந்தது, நிறுவனம் மூலதனச் செலவினங்களுக்கு நிதியளிக்க உருவாக்கப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 8.85 மில்லியன் தொகையைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.. பின்வரும் அட்டவணை எண். 13 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மூலதனச் செலவினங்களின் விபரங்களைக் காட்டுகிறது.

| இல | திட்டங்கள் | **(ரூபா 299 மில்லியன்) செலவினம் 2021** |
|---|---|---|
| | **நிறுவன திட்டங்கள்** | |
| **1.0** | மூலதன சொத்துக்களை மறுசீரமைப்பு மற்றும் புனரமைத்தல் | |
| **1.1** | விடுதிக் கட்டிடம் மற்றும் நீர் கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் நிறுவனத்தில் வடிகால் அமைப்பு | 5.385 |
| **1.2** | வாகன இயந்திரம் மற்றும் பாரிய முன்னேற்றம் | 2.000 |
| **1.3** | கற்றல் மையத்தை மேம்படுத்துதல் | 1.085 |
| | மொத்தம் | **8.470** |
| **2.0** | உபகரணங்கள;/ இயந்திரங்கள் மற்றும் புத்தகங்களை கையகப்படுத்துதல் | |
| **2.1** | நூலக வசதிகளை முன்னேற்றுதல் | 2.050 |
| **2.2** | விரிவுரை மண்டபம் ஆடியோ காட்சி உபகரணங்கள் மற்றும் அரஙகம் மற்றும் பயிற்சி வசதிகளை மேம்படுத்துதல் | 2.484 |
| **2.4** | பயிற்சி நடவடிக்கைகளுக்கான மடிக் கணினிகள் | 1.006 |
| **2.5** | விடுதிக்கான கட்லரி பொருட்கள் | 0.500 |
| **2.6** | நூலக புத்தகங்கள் | 2.661 |
| **2.7** | CBE மின்மாற்றியை நிறுவுதல், மற்றும் கபாலிங் மற்றும் மின்மாற்றி அறையை தளம் தயாரித்தல் | 14.212 |
| | மொத்தம் | **22.913** |
| **3.0** | **இயலளவு அபிவிருத்தி** | |
| **3.1** | சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவு அபிவிருத்தி | 2.618 |
| | மொத்த திறைசேரி நிதி | **34.000** |

## 2021 ஆம் ஆண்டில் நிறுவனம் எதிர்கொள்ளும் சவால்கள்

கோவிட் 19 நோய் பரவல் காரணமாக 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறிப்பிடதக்க காலத்திற்கு மூடப்பட்டிருக்க வேண்டியிருந்தது. நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டியிருந்தது. பெருந்தோட்டத் துறையின் பெரும்பாலான பயிற்சி நடவடிக்கைகள் நடைமுறைக் கல்விச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவையாக இருப்பதால், முக்கியமான அம்சங்களை கற்றுக்கொள்வதற்கு மாணவர்களால் பங்குபற்ற முடியவில்லை. குறிப்பாக, சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான திறன் மேம்பாடு போன்ற சில முக்கியமான திட்டங்களை நாங்கள் நிறுத்த வேண்டியிருந்ததுடன் திட்டங்களைத் தொடர மாற்றுத் தீர்வுகளைக் காண வேண்டியிருந்தது.

2021 ஆம் ஆண்டில், தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் ஊரடங்கு உத்தரவு காரணமாக கட்டாய விடுமுறை காரணமாக ஊழியர்களின் பற்றாக்குறை ஏற்பட்டு நிறுவனம் மிகவும் சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டது. கார்ப்பரேட் துறை பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் பிற தனியார் துறை நிறுவனங்களும் தொழிலாளர் பற்றாக்குறையினை எதிர் கொண்டன மற்றும் குறைந்த பணியாளர்கள் அலுவலகம் மற்றும் பணிநிலையங்களில் தங்க முடியாமல் தவிக்கின்றனர். இந்த பிரச்சினை நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எதிர்மறையாக பாதித்துள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர, 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் எதிர்மறையான விளைவுகளை நிறுவனம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறைப் பிரச்சினைகளில் அதிகப் பணவீக்கத்தால் கட்டுமானப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக கட்டுமான செலவு அதிகரித்து, செயல் திட்டம் மற்றும் பாதீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்பட்டது. விரிவுரை மண்டபங்கள் , ஆராச்சி மற்றும் அபிவிருத்தி அலகு கொண்ட புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் மேற்கூறிய சூழ்நிலைகளால் தாமதமாகியதுடன் பட்டம் வழங்கும் நிலையைப் பெறுதல் போன்ற திட்டப்பணிகளுடன் புதிய கட்டிடத்தின் நிறைவுத் தேதியை நீட்டிக்க வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதால் எதிர்பார்த்த காலத்திற்கு அப்பால் 2022 க்கு ஒத்திவைக்கப்படும்.

கற்றல் மையத்தின் திறன் ஒரு நேரத்தில் 300 கிலோ பச்சை இலைகள். தென்னை மற்றும் ரப்பர் போன்ற பிற முக்கிய விவசாயப் பொருட்களுக்கும் இதேபோன்ற கற்றல் மையத்தை நிறுவ நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**செயற்திறனை முன்னேற்றுவதற்கான இடைத்தவணை தந்திரோபாயங்கள**

| இல | தந்திரோபயங்கள் |
|---|---|
| i | பட்டம் வழங்கும் நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்தியை நோக்கி நிறுவனத்தின் பயிற்சி வசதிகளை அபிவிருத்தி செய்தல். |
| ii | SLQF மற்றும் NVQ தரநிலைகளின் கீழ் பட்டப்படிப்பு வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்திட்டத்தை உருவாக்குதல். |
| iii | தேசிய தொழில் தகுதி (NVQ) கட்டமைப்புடன் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல். |
| iv | தேசிய மற்றும் சர்வதேசப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பெருந்தோட்டத் |

| | |
|---|---|
| | தொழில்துறையின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல். |
| v | தேவையான திறன்களை வழங்குவதன் மூலம் உற்பத்தி மற்றும் செயலாக்கத்தில் தூய்மையான உற்பத்தி மற்றும் பசுமை தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் |
| vi | இயலளவு அபிவிருத்தி பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் மூலம் சிறு தோட்ட உரிமையாளர்களது திறன்களை மேம்படுத்துதல். |
| vii | நவீன முகாமைத்துவ நுட்பங்கள் மற்றும் அறிவின் மூலம் பெருந்தோட்டத் தொழிலில் புதிய முயற்சியாளரை ஊக்குவித்தல். |
| viii | பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான R & D நடத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளை பரப்புதல். |
| ix | திட்டங்களை நடத்துவதற்கு புகழ்பெற்ற வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கல்வி அமைப்புகளுடன் ஒத்துழைத்தல். |
| x | பெருந்தோட்ட பணியாளர்களை ஒரு தொழில்சார் நடுகையாளராக்க பட்டய உறுப்பினர்களை அறிமுகப்படுத்துதல். |
| xi | பெருந்தோட்டத் கைத்தொழிலில் துறை வேலை வாய்ப்புகளின் தேவைப்பட்டை பூர்த்தி செய்வதற்காக இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துதல். |
| xii | மண்ணைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் பூச்சிகளை (தேனீக்கள் போன்றவை) பாதுகாக்க வேண்டியதன் அவசியம் தோட்டத்திற்கும் மற்றும் முழு நாட்டிற்கும் பயனுள்ளதாக இருக்கும். |
| xiii | நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் Ex. NIPM கற்றல் மையம் தேநீர் தயாரிப்பு பிரிவு |
| xiv | தேநீர்சுவைபார்தல்  போன்ற புதிய பாடத்திட்டத்தை பெருந்தோட்டத்துறைக்கு அறிமுகப்படுத்துதல். |

**முடிவுரை**

கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக நிறுவனம் அதன் செயல்பாடுகளை தற்காலிகமாக மூட வேண்டியிருந்தாலும், நிறுவனம் அதன் நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்க முடிந்தது. எனினும், 1000 கோடி ரூபாயை அரசாங்கம் வழங்கியுள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 93.36 மில்லியன் 2021 ஆம் ஆண்டில், அரசாங்கம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இருந்தபோதிலும், தொடர் மற்றும் மூலதன மானியங்கள். மொத்த நிகர சொத்து மதிப்பு ரூ. 2021 இறுதியில் 1045.53 மில்லியன்.

முழு உலகமும் எதிர்கொள்ளும் தொற்றுநோய்களின் காரணமாக பயிற்சி வருமானம் குறைந்துள்ள நிலையில், நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின் கோட்ப்பாடு பகுதிகளை மெய்நிகர் பயன்முறையில் நடத்த வேண்டியிருந்தது மற்றும் பாடத் தொகுதிகளை சரியான முறையில் திருத்தியது. இதன் விளைவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடப்பிரிவுகளின் புதிய திருத்தத்தின் மூலம் பாடநெறிக் கட்டணம் ஓரளவு குறைக்கப்பட்டது. இந்த நிறுவனம் 35 நிகழ்நிலை பயிற்சிப் பட்டறைகள் உட்பட 56 நிகழ்ச்சிகளை நடத்த முடிந்தது.

நிறுவனம் அறிக்கையிடல் காலத்தில் NVQ நிலை 4 முதல் NVQ நிலை 6 வரையிலான பாடநெறிகளை உருவாக்க முடியும், குறிப்பாக NVQ நிலை 4க்கான கருத்துருவை கல்வி அமைச்சினால் G C E O/L தேர்வு வெற்றிகரமாக. பூர்த்தி செய்த மாணவர்களுக்காக 13 வருட உத்திரவாதக் கல்வித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. 2021/22 ஆம் ஆண்டளவில் NVQ நிலை 7 ஐப் பெறுவதற்கு பட்டம் வழங்கும் நிறுவனமாக உடனடி இலக்கை நோக்கி நிறுவனத்தால் கல்வி மற்றும் பயிற்சி உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

ஒரு அரசு அமைப்பாக, NIPM இலக்கானது 04 கல்வித்தரம் மற்றும் இலக்கு எண் 08, பேண்தகு வளர்ச்சி இலக்குகளில் 2030 க்குள் அடைய வேண்டிய பொருளாதார வளர்ச்சியை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

2021 ஆம் ஆண்டில் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் அனைவருக்கும் ஆளுநர் சபை மற்றும் நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

.ஏ.எல்.ஏ.அசோக சிறிவர்தன
தலைவர்/NIPM
20.04.2022

# 2021

# நிதி அறிக்கைகள்

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,**
**எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,**
**அத்துருகிரிய.**

28 பெப்ரவரி 2022

## நிதி அறிக்கை பக்க இல.


| | |
|---|---|
| கணக்கிட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் | 47-55 |
| நிதி நிலைகூற்று | 56-57 |
| நிதி செயல்திறன் அறிக்கை | 58 |
| காசுப்பாச்சல் கூற்று | 59-60 |
| உரிமை / தேறிய சொத்து மாற்றல் கூற்று | 61-62 |
| பாதிடப்பட்ட மற்றும் உண்மையான செயல்திறன் | 63 |
| குறிப்புகள் மற்றும் அட்டவணைகள் | 64-69 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண அட்டவணை | 70-71 |
| அருவச்சொத்து சொத்து அட்டவணை | 72 |
| குறிப்புகள் மற்றும் அட்டவணைகள் (தொடர்) | 73-88 |
| பிரிவு அறிக்கை | 89-90 |
| நிதிப் பெழிப்புக்கள் | 91-92 |
| கணக்காய்வாளர் நாயக அறிக்கை | 93-100 |

# தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2021 ஆம் ஆண்டுக்கான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1.0 அறிக்கையிடல் உள்ளடக்கம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 1979 ஆம் ஆண்டின் 45 இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டத்தின் கிழ் நிறுவப்பட்ட சட்டரீதியான சபையாகும். இது அரசாங்கத்தின் சட்டரீதியான அமைப்பாகவும், மிகவும் பயனுள்ள சாத்தியமான நிறுவனமாக மாற்றியமைக்க 1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தினுடாகவும் 1987 ஆண்டின் சட்ட இல. 05 மற்றும் 2003 ஆண்டின் சட்ட இல. 38 ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டது.

இந்த சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைவாக பயிற்சிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல் மற்றும் தகுதியான தோட்ட நிர்வாகிகளுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு NIPM ஆகும்.தேயிலை, இறப்பர், கரும்பு, மரமுந்திரிகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்செய்கையில் ஈடுபட்டிருக்கும் சிறு தோட்ட துறை உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் உயர்தர தொழில்சார் திறனை பேணுதலை உறுதிப்படுத்துகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்கு, NIPM பல்வேறு பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகள், பரீட்சைகள் போன்றவற்றை நடத்துகிறது. அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிற்கு ஆராச்சி மற்றும் ஆலோசனை சேவைகளையும் வழங்குகின்றது. நிறுவனம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பட்ட படிப்பு கற்கைநெறிகளை நடத்துகிறது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு மாணவர்களுக்கான பயிற்சிகளை நடத்தும் திறனையும் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எம்.டி.எச். ஜெயவர்தன மாவத்தை, அத்துருகிரியவில் அமைந்துள்ளது.

## 2.0 தயாரிப்பிற்கான அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டு கூற்று

நிறுவன நிதிக்கூற்று, நிதி நிலை கூற்று, நிதி செயல்திறன் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, பணப்பாச்சல் கூற்று, மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செயற்திறன் ஆகியவற்றுடன் சேர்த்து குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இலங்கை அரச நிதி கணக்காளர்கள் சங்கத்தால் (APFASL) பிரகடனப்படுத்தப்பட்ட கணக்கீட்டு அட்டுறு அடிப்படையில் இலங்கை **அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு** அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலை கூற்றிலுள்ள பின்வரும் பொருட்கள் தவிர நிதி நிதி கூற்றுக்கள் வரலாற்று கிரய மாற்றல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- வாகனங்கள் மீள்மதிப்பீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

- 2014 ஆம் ஆண்டிலிருந்து அரச துறை கணக்கீட்டு நியமங்களை உள்வாங்கும் பொருட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகிறது. வருடாந்த அறிக்கையிடும் காலம் மற்றும் தொடரும் ஆண்டுகளுக்கு கிரய முறை பொருத்தமானது. பொகவந்தலாவ பிராந்திய நிலையத்தின் சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு 2015 இல் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

- ஓய்வூதிய நன்மை நடைமுறை மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் அங்கிகரிக்கப்பட்ட பொறுப்பாகும்.

- அத்துருகிரிய பிரதான இடத்தில் உள்ள காணி 2019 ஆண்டு காணி மீள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. பொகவந்தலாவ பிரந்திய நிலையத்திலுள்ள காணி 2015 ஆண்டு காணி மீள் மீள்மதிப்பிடப்பட்டு 2021 ஆண்டு சமர்ப்பிக்கப்பட்து.

### 2.3 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணையம்

இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா) முன்னிலைப் படுத்தப்படுகின்றது. இது நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணையமாகும்.

## 3.0 குறிப்பிடதக்க கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

நிதி கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவுக்கு அமைய தயரிக்கப்படுகிறது. கணக்கீட்டு கொள்கைகள் காலம் முழுவதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன. அரச மானியம் மற்றும் பயிற்சிகள் மூலம் ஈட்டிய வருமானம், கற்கைநெறிகள், ஆலோசனை பணிகளை மேற்கொள்ளல், தொழில்சார் அங்கத்துவ சந்தா மற்றும் வெளியீடுகளை விற்பனை செய்தல் போன்றவற்றிலிருந்து நிதி கிடைக்கின்றன.
இவ்வாறான திரட்டப்பட்ட நிதி தேவையின் போதும், நிறுவன பொறுப்புகளை பூர்த்திசெய்ய பயன்படுத்தப்படுகிறது.

நிதி கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தும் முதன்மை கணக்கீட்டு கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த கொள்கைகள் வேறுவிதமாக கூறப்படும் வரை தொடர்ச்சியாக அனைத்து வருடங்களிலும் பயன்படுத்தப்பட்டுகிறது.

### 3.1 மறைமுக சொத்துக்கள்

மறைமுக சொத்துக்கள் தனியாக கையகப்படுத்தப்பட்டு பெறுமானதேய்வு மற்றும் பெறுமதியிழப்பு நட்ட கிரயங்கள் குறைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. பெறுமான இழப்பு **நேர்கோட்டு முறையில்** பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளன். பயனுள்ள ஆயுட்கால மதிப்பீடு ஒவ்வோர் ஆண்டின் அறிக்கையிடல் காலத்திலும் வாய்ப்புக்கேற்றவாறு கட்டணங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீட்டிற்கான எந்த மாற்றங்களின் விளைவுகளும் எதிர்பார்க்கப்படும் அளப்படையில் கணக்கிடப்படும்

**˙.கணனி மென்பொருள்**

கணனி மென்பொருளாக உருவாக்கப்பட்டுள்ள கணக்கீடு, சம்பளப்பட்டியல், பயிற்சிநெறி புள்ளிவிபரம் ஜிஜஎஸ் மற்றும் வள முகாமைத்துவம் என்பன கணனி செயற்பாட்டு அமைப்பின் பகுதியாக இல்லாததால் இது நிறுவனத்தின் கட்புலனாக சொத்தாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் 4 வருடத்திற்கு மேற்பட்ட கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படுகின்றன.

**தொலைகல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம்**

பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா தொலைக்கல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம் கட்புலனாக சொத்தாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தின் (எழுதப்பட்ட) பயன்தரு ஆயுட்காலம் நான்கு வருடங்களாகும்.

**என்ஜபிஎம் இன் நிலைய பாடல்**

நிறுவனம் நிலைய பாடலை இசையயமைப்பு மற்றும் காட்சிகளுடன் வடிவமைத்துள்ளது. இவ் இசையமைப்பிற்றகான செலவு மற்றும் இசை நிறுவனத்தின் கட்புலனாக சொத்தாக கருதப்படுகின்றது. இசையமைப்பிற்றகான செலவு பெறுமான இழப்பு மதிப்பிட்டிற்கு உட்படாது.

**அருவச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயட்காலம் பின்வருமாறு**

| விபரம் | கணனி மென்பெருள் | தொலைக்கல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம் | என்ஜபிஎம் இன் நிலைய பாடல் |
|---|---|---|---|
| பயனுள்ள ஆயட்காலம் | 4 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் | N/A |

3.2 **பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவு விருத்தி பயிற்சிகள்.**

நிறுவனம் சிறு தோட்ட உரிமையாளர்களின் அறிவை விருத்தி செய்வதுடன் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக இயலளவு விருத்தி பயிற்சிகளை நடத்துகிறது. இந்த பயிற்சிகளுக்கான செலவு சிறுவனத்தின் மூலதன விருத்தி செலவாக கருதப்படுகின்றது. உற்பத்தி செய்கின்ற உயர்தர இறுதி பொருளை நுகர்வோரின் கையில் பார்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் அளவிலான விவசாய நடைமுறைகளை விருத்தி செய்வதற்கான அறிவு, திறன்களை முன்னேற்றுவதற்கு சிறு தோட்ட உரிமையாளர்களின் சமகால தேவையை இது பூர்திசெய்கின்றது.

இந்த பயிற்சிகள் ஊடாக சிறு தோட்ட உரிமையாளர்களின் உற்ப்பத்தித்திறன், அறிவு மற்றும் முகாமைத்துவ திறன்கள் முன்னேற்றப்படும் அதேநேரத்தில் நிறுவனத்தினுடைய நன்மதிப்பு விரிவாக்கத்துக்கு வழிவகுக்கும்.

இத்தகைய பயிற்சிகளின் பெறுபேறு ஒரு வருடத்திற்குள் உணரப்படும். ஆகவே இது போன்ற முதலீட்டின் பெறுமதி அதே வருடத்தில் பதிவழிக்கப்படும்.

2021 ஆம் ஆண்டிற்கு பொருந்தோட்ட சிறு உரிமையாளர்கள் மற்றும் கீழ் மட்ட தொழிலாளர்களின் அறிவை விருத்திசெய்ய 114 பயிற்சிகளை ரூபா. 2.617 மில்லியன் செலவில் 2020 இல் நிறுவனம் நடத்தியது.

மேற் குறிப்பிடவற்றுக்கு மேலதிகமாக நிறுவனம் பொருந்தோட்ட துறையில் நுழைய தயாராக இருக்கும் இளைய தலைமுறையினரின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) முறைமையின் கீழ் பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கான பயிற்சிகளை நடத்துகிறது.

## 3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்று கிரய அடிப்படையில் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட வலுகுன்றல் நட்டம் என்பன குறைத்து காட்டப்படுகிறது. இந்த வரலாற்று கிரயம் சொத்திலிருந்து எதிர்பார்கும் பயன்பாட்டிற்கு பயன்படுதக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதல் மற்றும் குறிப்பிடதக்க புனரமைப்புக்காக நேரடியாக செல்வாக்கு செலுத்தும் அனைத்து செலவுகளையும் உள்ளடக்கியது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் வேறுபட்ட பயனுள்ள ஆயட்காலத்தை கொண்டுள்ளது. அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என தனி உருப்படிகளாக (பிரதான பகுதிகளாக) கணக்கிடப்படுகிறது.

3.3.1 பயனுள்ள ஆயட்காலம்

பொறுமானத்தேய்வு என்பது கணக்கீட்டு நோக்கத்திற்காக இழிவுப் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்ட விதத்தின் அடிப்படையில் பயன்தரு ஆயட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையில் சொத்தினை பதிவழித்து கணிப்பிடப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயட்காலமும் பயன்படுத்தும் பொறுமானத்தேய்வு விதமும் பின்வருமாறு (கீழே உள்ள பந்திகளில் விதிவிலக்காக கூறப்படும் வரைக்கும் இந்த வீதங்கள் பொதுவாக பயன்படுத்தப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| **இலவசமாக வைத்திருக்கும் கட்டிடங்கள்** | **20 வருடங்கள்** | 5% |
| **அலுவலக தளபாடங்கள்** | **10 வருடங்கள்** | 10% |
| **மோட்டார் வாகனங்கள்** | **5 வருடங்கள்** | 20% |
| **உட்கட்டமைப்பு சொத்துக்கள்** | **10 வருடங்கள்** | 10% |
| **நூலக புத்தகங்கள்** | **10 வருடங்கள்** | 10% |

**விதிவிலக்குகள்**

பொறி மற்றும் இயந்திரத்தின் கிரயத்திலும், அலுவலக உபகரணங்கள் உபகரண பெறுமதியிலும் உள்ளடங்கும். இந்த சொத்துக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெவ்வேறு பயன்தரு ஆயுட்க்காலங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 5 வருடங்கள் |
| ஏனைய உபகரணங்கள் | 4 வருடங்கள் |

- உட்கட்டமைப்பு சொத்துகளில் கணனி வலையமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் பயன்தரு ஆயுட்க்காலங்கள் 5 வருடங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- 150 KVA மின்பிறப்பாக்கியின் பயன்தரு ஆயுட்க்காலம் 10 வருடங்களாகும். இது பொறி மற்றும் இயந்திரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- கைத்தறி, கட்லரிகள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் ஆகியவை 2019 முதல் நுகர்வு சொத்துக்களாக அங்கிகரிக்கப்படுகின்றன.

அரச கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக பின்வரும் சொத்துக்கள் உட்கட்டமைப்பு சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- வீதி அபிவிருத்தி

- நீர் மற்றும் சக்தி வழங்கல் மற்றும் சக்தி உருவாக்கல் அமைப்பு
- மின்சாரம் வழங்கல்
- கணனி வலையமைப்பு

ஒவ்வொரு நிதியாண்டிலும் பொறுமானத்தேய்வு முறை மற்றும் பயன் தரு ஆயட்காலம் மற்றும் இழிவு பெறுமதி என்பன மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமாக இருந்தால் சீராக்கப்படுகின்றது

3.32 **அளவீட்டின் அடிப்படை**

அனைத்து ஆதனம் பொறி மற்றும் உபகரனம் என்பன கிரய முறைக்கு அமைய பெறுமான தேய்வு கணிக்கப்படகிறது. வாகனங்கள் மீள்மதிப்பீட்டு முறைக்கு அமைய அறிக்கையிடப்படுகின்றது. நிறுவனத்துக்கு சொந்தமான காணிக்கான பொறுமானத்தேய்வு கணிப்பிடு மற்றும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை

3.3.3 **கையுவிர்ப்புக்கள்**

எதிர்கால பொருளாதார நன்மை பொருட்களிடமிருந்து எதிர்பார்க்கப்படாத போது ஆதனம், பொறி மற்றும் உபகரனங்களின் உருப்படிகளை முன்கொண்டு சென்ற தொகை அங்கிகரிக்கப்படுவதில்லை. சொத்துக்களின் முன்கொண்டு சென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கையுதிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கையுதிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.3.4 வருடாந்த பொருட்கணக்கெடுப்பு

நிறுவனம் ஒவ்வொரு ஆண்டு இறுதியில் ஓர் வருடாந்த பொருட்க் கணக்கெடுப்பை நடத்துகிறது. மற்றும் பயன்படுத்த பொருளாதாரமற்ற உருப்படிகளை அகற்ற பரிந்துரைக்கிறது.

3.3.4 இலங்கை இராணுவம் கையகப்படுத்திய நிலத்தின் தற்போதய நிலை

1.9499 ஹெகடெயர் விரிவுபடுத்தப்பட்ட நிலம் மற்றும் மூன்று ஊழியர் விடுதிகள் இலங்கை இராணுவத்தின் ஏழாவது படைப்பரிவுக்கு மற்றப்பட்டது மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் உரிமை பிரிவு 38 (ஏ) நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஒக்டோபரில் நிறுவனம் ரூபா 155.0 மில்லியன் இழப்பீட்டை பெற்றுக்கொண்டது.

2017 இல் இருந்து 2022 வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள் விசேட அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு பயன்படுத்த பாதுகப்பு வைப்பின் கீழ் வைக்கபட்டது.

## 4.0 உட்கட்டமைப்பு வசதிகளுக்கான வைப்புகள

நிறுவனங்களுக்கு வழங்கும் உட்கட்டமைப்பு சேவை மீதுள்ள ஒப்பந்த பொறுப்புக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு இதில் உள்ளடங்கும்.

## 5.0 இருப்புக்கள்

நிறுவன வெளியீடுகள் அச்சிடும் மூலப்பொருட்கள், எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைகள், ரயர், கட்டிட பராமரிப்புக்கான மூலப்பொருட்கள், ஏனைய நுகர்வு பொருட்கள் என்பனவற்றை இருப்புக்கள் கொண்டுள்ளது. இவைகள் முதல் வந்தது முதல் வெளியே கொள்கையின் அடிப்படைகளில் கிரயத்தில் பெறுமதியிடப்படுகின்றன.

தேயிலை அபிவிருத்தி திட்டத்திலிருந்து நன்கொடை செய்யப்பட்ட வெளியீட்டு புத்தகங்களை வெளியீட்டு இருப்பு கொண்டுள்ளது.

